

பி.ஸ்ரீ

391. நிழலும் நிஜமும்

நிழலைப் பிடித்து அனுமனைப் பிடிக்க முயலும் சாயாக்கிரகிணி என்ற அங்காரதாரையை ஸிம்ஹிகை என்பர் வால்மீகி.

அங்காரதாரையின் உக்கிர சொரூபம் தோன்றுவதற்குமுன் மிக்க அமைதி வாய்ந்த சூழ்நிலை ஒன்றைக் கம்பன் அமைத்துக் காட்டுகிறானல்லவா? பெரும் புயலுக்கு முன் ஒரு வஞ்ச அமைதி வான மண்டலத்தில் கொஞ்சுவது போலே. ஆதிகவியாகிய வால்மீகி மாமுனிவரும், சுரசைக்கும் ஸிம்ஹிகைக்குமிடையே வேறொரு சூழ்நிலையைக் காட்டுகிறார்.

ஸிம்ஹிகையின் சூழ்நிலை

அனுமன் சுரசையின் ஆசிபெற்றுக் கொண்டதும் சகல பிராணிகளும் அனுமனது அந்தச் செயற்கருஞ்செயலை, 'நன்று, நன்று' என்று கொண்டாடினவாம். கருடனைப் போல் அனுமன் அதிவேகமாய்ச் சென்று கொண்டிருந்த ஆகாச மார்க்கத்திலே நீருண்ட மேகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தன.

வித்யாதரர் முதலானவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். நிர்மலமான விமானங்கள் முதலியன அந்த மார்க்கத்தை அணி செய்தன. புண்ணியம் செய்து சுவர்க்கத்தை அடைந்த பெரியோர்களாலும் பிரகாசித்தது, சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசித்த அந்த வான வீதி.

தேவேந்திரன் தன் வெள்ளை யானை மேல் திரிந்து கொண்டிருந்தான். அந்த வாயு மார்க்கத்திலே எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்துக் கொண்டே வாயு புத்திரன் சென்றான். அப்போது ஸிம்ஹிகை தோன்றுவதாக வால்மீகி கற்பனை.

அமுதமும் ஆலகாலமும்

கம்பனோ 'கீதங்கள் இசைத்தனர் கின்னரர்' என்று தொடங்கிக் கலை விருந்துடன் இயற்கை விருந்தும் அளிக்கிறான் அனுமனுக்கு. தமிழும் வடமொழியும் ஒருங்கே தனக்குத் திறை கொடுத்து உதவிய செஞ்சொற்களால், சப்த ஜாலங்களால், மந்தமாருதம் போல் தவழ்ந்து தழுவும் மழலையங் கவிதையால், சாந்தி பரிமளிக்கும் ஏதோ ஒரு புதிய உலகிலே சஞ்சரிக்க விடுகிறான் வாசகருள்ளத்தை.



'ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி' என்று சொல்லத் தோன்றுகிறது. 'இனி அனுமனுடைய ஆகாச யாத்திரை யெல்லாம் அமைதியாகவே முற்றுப் பெறும்' என்று நம்பத் தோன்றுகிறது.

மந்தார முந்து
மகரந்த மணந்த
வாடை

என்ற பாட்டு, 'செஞ்செவிக்காதுநங்க' என்று நம் செவியில் விழுந்து முற்றுப்பெறுமலே ஒலி செய்யும் போது, சாந்தியின் சிகரத்தை, கவிதை-வானின் உச்சத்தைத் தொட்டுப் பார்க்கிறது நம் உள்ளம். உடனே சிதறடிக்கிறது இந்த அமைதியுலகை, ஆனந்தக் கனவுப் பிரபஞ்சத்தை, அரக்கியின் அதட்டும் குரல் :

'இங்கார் கடத்திர்எனை ?
என்னு எழுந்தாள்
அங்கார தாரை,பிறி(து)
ஆலாலம் அன்னுள்.

இப் பாடல்களைப் பாடிப் பாடிப் பரவசமாகும் போது, இச்சுவை யமைப்பினை நுகர்ந்து நுகர்ந்து புலமைப் பேரின்பம் அனுபவிக்கக் கூடும்.

ஸிம்ஹிகையின் கதை

இனி இந்த அங்காரதாரை என்ற ஸிம்ஹிகையின் வதம் குறித்து வால்மீகி கதையைப் பார்க்கலாம்,

கொழுத்த ஸிம்ஹிகை—இஷ்டமான ரூபத்தை எடுக்கக்கூடிய அரக்கி, — பாய்ந்து சென்று கொண்டிருக்கும் அனுமனைப் பார்த்ததும், 'இவ்வளவு நாளாய் உணவில்லாத எனக்கு அந்தப் பெரிய பிராணி வலுவில் வந்து கிடைக்கிறது !' என்று நினைத்து நிழலைப் பிடித்து இழுத்தாள்.

உடனே அனுமன், 'கடலில் செல்லும் பெருங் கப்பலைப் பலமான எதிர் காற்று மோதித் தாக்கி நிறுத்துவது போன்ற ஓர் உணர்ச்சியை அடைந்தான். (அருமையான மனோபாவம்.)

பக்கங்களிலும் பார்த்தான், மேலுங் கீழும் பார்த்தான். கடலிலிருந்து மேலே கிளம்பிய ஒரு பெரிய பூதத்தைப் பார்த்தான். அந்த விகார முகத்தையும் நோக்கினுன். முன்னிலும் பேருருவமாகத் தன்னை வளரச் செய்து கொண்டான்.

அரக்கியும் தன் வாயைப் பாதாளம் போல் திறந்து கர்ஜித்து விழுங்க ஓடி வந்தாள். அந்த வாயையும் உடலின் அளவையும் உயிர்நிலைகளையும் கண்டு



சிரேஷ்டனை நோக்கி, 'பயங்கரமான காரியத்தைச் செய்தீர். அந்த மகா பலமுள்ள ஜந்துவை அலட்சியமாகக் கொன்றீர். எண்ணின காரியத்தை இடையூறின்றி இனிது முடித்தீர். வானரேந்திர! உம்மைப்போல் சூட்சும திருஷ்டியும் தைரியமும் எப்பொருளிலும் உண்மையை அறிய வல்ல புத்தியும் சக்தியும் ஆகிய இந்த நான்கு அம்சங்களும் எவனுக்கு இருந்தாலும், அவன் இடையூறுகளுக்கு இடங்கொடுக்க மாட்டான்' என்று கொண்டாடின.

இப்படியெல்லாம் கௌரவிக்கப் பெற்றவனாய் அனுமன் வான வீதியில் யாத்திரையைத் தொடர்ந்து போய் இலங்கைத் தீவைக் கண்ணுற்றான். இது வால்மீகி கதையின் ஸாரம்.

கொண்ட வானரப் பெரியோன் கொஞ்ச நேரம் தன்னைச் சுருக்கிக் கொண்டு அந்தப் பிளந்த வாய்க்குள் வஜ்ராயுதம் போல் போய் விழுந்தான்.

ஸித்தர்களும் சாரணர்களும் அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். அனுமனே கூர்மையான நகங்களால் உயிர்நிலைகளைக் கிழித்து மனோவேகமாய் வெளிக்கிளம்பி விட்டான்.

இப்படி அரக்கியைத் தன் பார்வையாலும், தைரியத்தாலும், சாதுரியத்தாலும் வென்று மறுபடியும் விரைவாகப் பேருருவம் கொண்டான். ஸிம்ஹிகை ஹிருதயம் பிளந்து கதறிக்கொண்டு கடலில் விழுந்து மாண்டாள்.

அப்போது வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பூதங்கள் வானர

ஒரு புதிய சிருஷ்டி

இக் கதையைக் கம்பன் மொழிபெயர்க்கவில்லை. வால்மீகியின் 'தழுவல்' என்று சொல்வதும் பொருத்தமில்லை. கம்பனுடைய சொந்த சிருஷ்டிதான் அங்காரதாரை என்பதை அறிந்து கொள்வீர்கள். முக்கியமான கட்டங்களெல்லாம் இப்படித்தானே.

பார்த்துக் கொள்ளுங்கள், சமுத்திரப் பிரசவமாகிக் கருங்கடலையும் வென்ற கொடுங்கடல் போல் தோற்றமளிக்கும் விஷ கண்டகியை:

காநக் கடுங்குறி
கனாக்கிறுதி கண்ணுள்,

பாதச் சிலம்பினொலி
வேலையொலி பம்ப,
வேதக் கொழுஞ்சுடரை
நாடிநெறி மேனாள்
ஓதத்தின் மேவுமது
கைடவரை ஒத்தாள்.

[காதக் கடுங்குறி — காத தூரத்திலே இருப்பதையும் விரைந்து குறித்தறிகின்ற. கணக்கு இறுதி கண்ணாள் — கணக்கே இறுதியாகக் கூடிய கண்களையுடையவள்; அதாவது கண் பார்வைக்கு உரிய கணக்குகளுக்கும் அப்பால் பார்க்கக் கூடியவள்; தன் பெருவடிவத்திற்கு ஏற்ற நெடுங் கண்களுடன் காத தூரத்திலிருக்கும் பொருள்களையும் நோக்கி அறிய வல்லவள். பாதச் சிலம்பின் ஒலி - தன் பெரு வடிவத்துக்குத் தக்கவாறே தன் பெரும் பாதங்களில் அணிந்திருக்கும் பெரிய தண்டைகளின் ஓசை. வேலை ஒலி பம்ப - கடலோசையினும் அதிகமாய் ஓசைப்பட, வேதக் கொழுஞ்சுடரை - வேதத்திலுள்ள பரஞ்சோதியை. நாடி நெறி - வழியை நாடிப்போய். மேனாள் - முன்னொரு காலத்தில். ஓதத்தில் - பிரளய சமுத்திரத்தின் மீது. மேவும் - சென்ற. மதுகைடவர் - மது, கைடபன் என்ற இரண்டு அசுரர்களையும்.]

'மாதம் போம் காத வழி' என்று ஒரு குதிரையை வருணித்தானல்லவா காளமேகப் புலவன்? இங்கே ஒரே பார்வை காதம் போகும் வேகத்தைக் காண்கிறோம். இத்தகைய நெடுங் கண்களுடன், தண்டைகளைக் கொண்டு ஓசைப் படுத்தியே பயமுறுத்துகிறாள்! உலக உருண்டைக்கே உறை போடத் தைத்துத் தயாராக வைத்திருப்பதுபோலத் தோன்றுகிற அந்த வாயைத்தான் பாருங்கள்.



அம்மாள் உடுத்துக் கொண்டிருக்கிறாளே அந்த யானைத்தோல் — புடவை எந்த ஜவுளிக்கடையில் வாங்கியது? யானைத் தோல் சிவபெருமானுக்குப் போர்வை; இந்த அம்மாளுக்கோ 'ஸாரி' (Sari)!

தாருகவனத்து முனிவர்கள் மந்திரச் செருக்கினால் ஒரு வேள்வி செய்தனராம். அந்த வேள்வித் தீயையும், அதிலிருந்து எழுந்த பூதங்கள், நாகங்கள், புலி, யானை, மான் முதலியவற்றையும் ஏவி ஸம்ஹாரக் கடவுளையே ஸம்ஹரித்து விடும்படி அனுப்பி வைத்தார்களாம். அந்த நாகங்களைப் பெருமான் அணிகளாய் அணிந்து கொண்டார். பூதகணங்களைத் தமது பரிவாரமாக்கிக் கொண்டார். நெருப்பையும் மானையும் கையில் ஏந்தினார். புலித் தோலை உரித்து உடையாகவும், யானைத் தோலை உரித்துப் போர்வையாகவும் தரித்துக் கொண்டார். இந்த அங்காரதாரை யம்மாள் பார்த்தாளாம்; அதே யானையில் பாக்கியுள்ள தோலையும் உரித்துப் புடவை கட்டிக் கொண்டாளோ? — என்பது குறிப்பு.

இந்தப் படாடோபங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் மயங்கப் போகிறவனா அனுமன்? முகத்தை ஊடுருவி நோக்குகிறானாம். நிழலை ஒதுக்கி நிஜத்தைக் கண்டு கொள்ளப் போகிறான்.

* * *

'ஊடுருவிப் பார்வை செயும் உண்மையுளோர் கண்ட பொருள்' என்றார் ஒருவர். இந்த ஆற்றல் அனுமனிடம் வாய்த்திருப்பதால் தான், அரக்கி — வேடத்திலும் சுரஸையைக் கண்டு கொண்டான். இப்போது நிழலைப்பற்றி யிழுக்கும் அரக்கியை 'வேஷக்காரி யல்ல, மோசக்காரி' என்றும் கண்டு கொள்கிறான்.



392. இறந்தான், பிறந்தான்!

வான வீதியிலே பாய்ந்து வருகிறது ஒரு பேருருவம். கீழே கடலில் நின்று கொண்டு வானமுகட்டில் தலை முட்ட நிமிர்ந்திருக்கிறது ஒரு பேருருவம். இந்தப் பேருருவம் அந்தப் பேருருவத்தைப் பட்சித்துப் பசி தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறது. என்ன பசி!—ஐயோ, என்ன தீனி!

பசி தீர்ந்ததா? பசியைத் தீர்த்து விட்டது தீனி—தீர்த்தே விட்டது! என்ன, புதிர் போடுகிற மாதிரி இருக்கிறதோ?

பேருருவம் கொண்டு,போய்க்கொண்டிருக்கும் அனுமனுடைய வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறாள், அங்காரதாரை,தானும் பேருருவம் கொண்டவளாய். நிழலைப் பிடித்துக் கொண்டே கடலிலிருந்து தன் உருவத்தை வளர்த்துக் கொள்கிறாள். எப்படி நிமிர்ந்து நிற்கிறாள், அனுமன் எப்படி இவளைத் தெரிந்து கொள்கிறான்?

நின்றாள் நிமிர்ந்(து),அலை
நெடுங்கடலின் நீர்தன்
வன்றாள் அலம்ப,முடி
வான்முகடு வவ்வ;
அன்றாய் திறத்தவன்,
'அறத்தை அருளோடும்
தின்றாள் ஒருத்திஇவள்!'
என்பது தெரிந்தான்.

[அலை நெடுங்கடல் - அலைகளையுடைய நெடுங்கடல். வன்றாள் - வல்தாள்; வலிய கால்கள். அலம்ப - கழுவ. முடி - தலை. வான்முகடு வவ்வ - வானத்தின் உச்சியை முட்ட. அன்றாய் திறத்தவன் - அன்று ஆய் திறத்தவன்; அப்போது ஆராயும் திறமையுள்ள அனுமன்.]

அறத்தின் வேர் அருள் என்ற கருத்தைக் கம்பன் வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறான். தருமத்தை வேரோடு பலகாரம் செய்தவளாம் இந்த அரக்கி. வேரையாவது விட்டு வைத்தால்தானே பூஞ்செடி மறுபடியும் தழைத்து இலை வீசி மலர் சொரியப் போகிறது?

இந்தப் பாட்டில் முதல் இரண்டு அடிகளிலே அரக்கி இறுமாந்து நிற்கும் நிலை எத்தகைய சப்த ஜாலங்களுடன் வருணிக்கப்படுகிறது. 'வா, வா, இரையே! மரியாதையாக வந்து விழுந்து விடு என்

வாய்க்குள்ளே!' என்று சொல்லாமற் சொல்வது போல், தேரையை வசீகரித்து இழுக்கும் பார்வையோடு படமெடுத்து அந்தப் பிராணியின் வரவு நோக்கியிருக்கும் ஒரு மகாநாகம் போல் நிற்கிறாள் அரக்கி. அவ்வளவு வசீகரமும் வாய்த்திருக்கிறது ஓசைப் பொலிவிலே. ஓதி ஓதி உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.

அந்த முகத்தை ஊடுருவிப் பார்க்கும் அனுமனுடைய பார்வையிலேயே ஓரளவு உடைபடுகிறது அரக்கியின் வசிய சக்தி.

என்றாலும், நிழலை ஆகர்ஷிக்கும் சக்தி இன்னும் வேலை செய்து கொண்டு தானிருக்கிறது. தன்னை யறியாமலே அனுமன் ஆழ்ந்து கொண்டிருக்கிறான். வானத்திலே வேறு வழியும் காணப்பட வில்லை. அப்படி அடைத்திருக்கிறது அந்த வாய் அந்த வானவெளியை.

ஆழ்ந்த குகை போலத் தோன்றும் வயிற்றை யல்லவா நெருங்கிக் கொண்டிருக்கிறான் அனுமன் தன்னை யறியாமலே? அப்போது என்ன செய்யப் போகிறான்?

அதற்கு முன் என்ன சொல்லப் போகிறான்? அதற்கும் முன் என்ன நினைக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்வோம் :

பேழ்வா(ய்) அகந்தலது,
 பேருலகம் மூடும்
நீள்வான் அகத்தினிடை
 எகுநெறி காணான்,
ஆழ்வான், அணுக்கனவள்
 ஆழ்பில வயிற்றைப்
போழ்வான் நினைந்(து) இனைய
 வாய்மொழி புகன்றான்.

[பேழ்வாய் அகத்து அலது — திறந்த வாய்க்குள் புகுந்தால் அன்றி. பேருலகம் மூடும் — பெரிய பூமியை மூடிக் கொண்டிருக்கிற. நீள்வான் அகத்தினிடை — நீளமான வானவளையத்தினிடையே. எகுநெறி — தான் போய்க்கொண்டிருக்கும் வழியை. காணான் — காணாதவனாய். ஆழ்வான் அணுக்கன் — (அவள் நிழலைப் பிடித்து இழுக்க) அவளை நோக்கி ஆழ்கின்றவனாய், அவளை அணுகியவனாகி. ஆழ் பில வயிற்றை — ஆழ்ந்த குகை போன்ற அந்த வயிற்றை. போழ்வான் நினைந்து — பிளக்க நினைத்து. இனைய வாய்மொழி — இவ்வாறான வாய் வார்த்தையை.]

அரக்கியின் முகத்தைப் பார்த்ததும் அந்த 'அகத்தின் அழகை' அப்படியே தெரிந்து கொண்ட அனுமன், 'சுரசையைப்போல் இல்லை இவள், விரைவில் அப்பால் போய்விட வேண்டும்' என்று எண்ணுகிறான். ஆனால் போகும் வழியே காணப்படவில்லையாம் திடீரென்று. அப்படி அந்த வழியை மூடி விட்டது அரக்கியின் வாய்.

உலகத்தை மூடியிருக்கிறதே வான வளையம், அதனிடையே வான வீதியில் வழி கண்டு வந்தவனுக்கு அந்த வழி மூடப்பட்டது மட்டுமா இப்போதுள்ள அபாயம்? அனுமனால் அதே உயரத்தில் நிற்கவும் இயலவில்லை. ஆழ்கின்றான் ஆழ்பில வயிற்றை நோக்கி. வாயையல்ல, வயிற்றையே நெருங்கி விடுகிறான்.

இந்த வயிற்றைப் பிளந்து அப்பால் போக வேண்டியது தான் என்று நினைக்கிறான். என்றாலும் வாய் வார்த்தையாகச் சொல்லிப் பார்க்கலாமே; 'யார்? என்ன செய்தி?' என்று கேட்டுப் பார்க்கலாமே.

தன் பலம் கொண்டு சமாளித்து நிமிர்ந்து அந்த வாயை நோக்கி வார்த்தையாடுகிறான் :

'சாயா வரந்தழுவி
 னாய்; தழிய பின்னும்,
ஓயாது யார்ந்தவிசை
 கண்டும்உணர் கில்லாய்;
வாயால் அளந்துநெடு
 வான்வழி அடைந்தாய்;
நீ யாரை? என்னை இவண்
 நின்றநிலை?' என்றான்.

[சாயாவரம்—சாயை அல்லது நிழலைப் பிடித்திழுக்கும் சக்தி தரும் வரம். வரம் தழுவினாய்—அந்த வரத்தைத் தழுவிக்



கொண்டிருக்கிறாய்; அதாவது பெற்றிருக்கிறாய். தழிய பின்னும்—அந்த வரம் தழுவி அந்தச் சக்தியால் என்னை நீ பற்றி இழுத்த பின்பும். ஓயாது உயர்ந்த விசை — நான் ஓய்ந்து போகாமல் உயர்ந்து செல்லுகின்ற என் வேகத்தை. உணர்கில்லாய்—உணர்ந்து கொள்ளும் ஆற்றலை நீ பெற்றிருக்கவில்லை. நீ யாரை — நீ யார். என்னை — என்ன. இவண் — இங்கு.]



இப்படிக் கோப மூட்டியதும் அரக்கி வாயளப்பாகவும் வீண் பேச்சுப் பேசுகிறாள்:

‘பெண்பால் எனக்கருது
 பெற்றியொழி; உற்றால்
விண்பால வர்க்கும்உயிர்
 விடுவது மெய்யே;
கண்பால் அடுத்தஉயிர்;
 காலன்வரு மேனும்
உண்பான் அருத்திய(து)
 ஒழிப்பரிய(து)!’ என்றாள்.

[பெண்பால் எனக் கருது பெற்றி — என்னைப் பெண்ணென்று கருதுகின்ற நினைப்பை. ஒழி —ஒழித்துவிடு. உற்றால்— எனக்கருகே வந்து விட்டால். விண்பாலவர்க்குப் —விண்ணுலகத்துத் தேவர்களுக்கும். உயிர் வீடுவது — உயிர் போவது. கண்பால் அடுத்த உயிர் —என் கண்ணுக் கெதிரே தோன்றுகிற உயிராக. காலன் வருமேனும் — (விடுவிக்க வேண்டுமென்று) காலனாகிய ஸாக்ஷாத் யமனே வருவானானாலும். உண்பான் — உண்ணும்படி. அருத்தி—ஆசை. அது ஒழிப்பு அரியது — அந்த ஆசையைப் போக்குவது முடியாத காரியம்.]

அனுமன் பேச்சிலே இவளைப் 'பெண் பால்' எனக் கருதினனா? 'ஆண்பால்' எனக் கருதினனா? என்பதே வெளிப் படையாக இல்லை. எனினும் 'பெண் ணென்று எண்ணித்தான் இவ்வளவு தைரியமாகப் பேசுகிறானோ?' என்று எண்ணுகிறாள். பெண்ணென்று தன் னைப் பிறர் நினைப்பதே அவமதிப்பு எனக் கருதும் அரக்கியின் பண்பாட்டை என்னென்பது?

பண்பாடு இப்படி யிருக்க, வயிற்றுப் பாடு எப்படி யிருக்கிறது, பாருங்கள். இவளைக் கொண்டு போகக் காலனே வந்து விட்டாலும், அந்த உயிர் (அந்தக் காலன் என்ற உயிர்) கண்ணுக்கு எதிரே வரும்போது அவனையும் உண்டு விட வேணும் என்பதுதான் இவள் ஆசையாம். அந்த ஆசையை அடக்க முடியாதாம்.

'கொன்று விடுவேன் இவளை' என்று கால பாசத்துடனும் சூலத்துடனும் வருகிறான் காலன். 'தின்று விடுவேன் இந்த உயிரையும்!' என்று ஆசையுடன் கிளம்பி விடுவாளாம் அங்காரதாரை.

'தின்றுவிடுவேன் அந்த யமப்பயலை, எருமை மாட்டுடனும் பாசத்துடனும் சூலத்துடனும்!' என்பது மன நிலை. தொண்டையைச் சூலம் கிழித்துவிடுமே என்றாலும் கூட! இந்த யமகாதகிக்குத் தான் என்ன பசி, என்ன ருசி!

தருமத்தை வேரோடு பலகாரம் செய்த பேர்வழிக்கு, யமதர்ம ராஜாவும் ஆசைக்குத் தோசை தானும்.

அதட்டிக்கொண்டே அரக்கி எழுந்து வாய் திறந்து வழி யடைத்து நிற்க, அந்த நிலையையும் அதட்டலையும் அனு மன் பரிகசித்துக் கேள்விகள் தொடுக்க, 'ஐயோ, என்னைப் பெண்ணாக மதித்து விட்டானே' என்று வெட்கப்படுகிறா ளாம் அரக்கி.

நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்

என்கிறாள் பாரதி கண்ட புதுமைப் பெண். கம்பன் கண்ட அங்காரதாரைப் பெண்மணியோ பெண்மை குறித்தே நாணமடைகிறாள், வருந்துகிறாள். இந்த அவமதிப்பைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்கிறாள். திடீரென்று கோரப் பற்க ளோடு கூடிய வாய் திறக்கிறது பெரி தாக. அனுமனை விழுங்கத்தான். ஆனால் இவளுக்கு மேல் ஆத்திரம் இவனுக்கு. நுழைந்து விடுகிறான் பளிச் சென்று.

திறந்தாள் எயிற்றைஅவள்,
அண்ணல்இடை சென்றான்!

[எயிற்றை — கோரப் பற்களை. அண் ணல் — (இங்கே) அனுமன்.]

என்ன பயங்கரமான காட்சி! திறந் தாள் வாயை அவள் என்று சொல்லாமல் கோரப் பற்களைத் திறந்தாள் என்று கூறுவது பயங்கரத்தை எவ்வளவோ பயங்கரமாய்க் காட்டுகிறது.

கோரமான அந்தப் பல் வரிசைகளுக் கிடையே ராமதூதன் நுழைந்ததும், 'இறந்தான்!' என்றே ஏங்கிப் போகிறார் களாம் தேவர்கள்.

ஆனால் 'பிறந்தான்' என்ற குதூகல கோஷமும் காதில் விழுகிறது. 'இறந் தான்' என்ற அழுகண்ணீர் 'பிறந்தான்' என்று ஆனந்தக் கண்ணீராகி விடு கிறது. இந்த அதிசயங்களை அடுத்த வாரம் விவரமாய்ப் பார்ப்போம்.



393. கொலையும் கலையாயிற்று!

அந்தப் பல் வரிசைகளுக்கிடையே அனுமன் நுழைந்ததும், 'ஐயோ போனான், தொலைந்தே போனான்: கோர மரணம்!' என்று அறமே அலறி விட்டதாம். தேவர்களோ வாய்விட்டுக் கதறவும் ஆற்றல் இல்லாமல் புழுங்கினார்கள், பொருமினார்கள்.

செத்தவன் செத்தவன் தானா ?

(ஒரு பொது நோக்கு)

ஆனால் 'செத்தான் அனுமன்' என்று சித்தாந்தம் செய்ததுதான் தாமதம், 'பிழைத்துக் கொண்டான்! 'அதோ மாண்டவன் மீண்டான்!' என்று மீண்டும் பிரமிக்கும்படி மீண்டும் பிறக்கிறானாம் அனுமன் :

திறந்தாள் எயிற்றைஅவள்,
அண்ணல்இடை சென்றான்;
அறம்தான் அரற்றிய(து)!
அயர்ந்(து)அமரர் எய்த்தார்,
'இறந்தான்!' எனக்கொ(டு),ஓர்
இமைப்பதனின் முன்னம்
'பிறந்தான்!' எனப்பெரிய
கோளரி பெயர்ந்தான்.

[எயிற்றை — கோரப் பற்களை. அண்ணல் — பெருமையில் சிறந்த அனுமன். அரற்றியது — புலம்பியது, அலறியது. அயர்ந்து — வருந்தி. அமரர் — தேவர். எய்த்தார்—இளைத்தார். கொடு—கொண்டு. ஓர் இமைப்பதனின் முன்னம் — ஒரு முறை இமைப்பதற்கு முன். கோளரி — சிங்கம் போன்ற அனுமன். பெயர்ந்தான் — வெளிப்பட்டான்.]

அந்தக் கோரப் பற்களுக்கு இடையே புகுந்து, குகை போன்ற வயிற்றுக்குள்ளிருந்த குடல்களைப் பறித்து வயிற்றைப் பீறி வாய்வரை கிழித்துக் கொண்டு அனுமன் கிளம்பி விடுகிறான் என்ற கோரக் காட்சியைத்தான் கவிஞன் வெளியிடுகிறான். ஆனால் எப்படி வெளியிடுகிறான் என்பதைச் சற்றுக் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும்.

இப்படிச் செய்வது, கம்பனது கலைச் சிறப்பியல்புகளை ஒருவாறு உணர்ந்து கொள்வதற்கு ஒரு வழிகாட்டி.

இந்த அங்காரதாரை வதத்தின் ஆரம்பம் எவ்வளவு நாடகத்திறமையுடன் அமைந்திருக்கிறது என்பதைத் 'திறந்தாள் எயிற்றை அவள்' என்று தொடங்கும் இப் பாட்டிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.



கள்வாய் அரக்கிகத–
றக்குடர் கணத்தின்
கொள்வார் தடக்கையின்
விசும்பின்மிசை
கொண்டான்;
முள்வாய் பொருப்பின்
முழை
எய்திமிக நொய்தின்
உள்வாழ் அரக்கொடெழு
திண் கலுழன்ஒத்தான்.

[குடர் — குடல். கணத்தின் – ஒரு க்ஷணத்தில். கொள்–பறித்துக் கொண்ட. வார் தடக்கையின்–நீண்ட பெரிய கைக ளோடு. விசும்பின் மிசை–ஆகாயத்தின் மீது. கொண்டான்–எறிக் கொண்டான். முள்வாய்–முட்செடிகள் பொருந்தி யுள்ள. பொருப்பின் முழை–மலையின் குகை. எய்தி–புகுந்து. நொய்தின்– விரைவாக; லாகவமாக, உள் வாழ்– உள்ளே வாழும். அரக்கொடு எழு– பாம்பு களை எடுத்துக் கொண்டு எழுகின்ற. திண் – வலிய. கலுழன்–கருடன்.]

ஒரு மலைக்குகை. அதன் வாசலுக் குக் காவல் முள்ளுச் செடிகள். அந்தக் குகைக்குள்ளே சிறிதும் அச்சமின்றி வாழ்ந்தன கொடிய கொழுத்த பாம்பு கள்.

அப்படி யிருக்க, ஒரு பொல்லாத கரு டன், சிறகை முள் கிழித்து விடாமல் விரைவாகவும் சாமர்த்தியமாகவும் குகைக்

'இறந்தான்...... பிறந்தான்' என்று சொல்லி, 'ஆஹா, உக்கிர நரஸிம்ம மூர்த்தி ('பெரிய கோளரி') யாகவே பிறந்து விட்டானே!' எனச் சுட்டிக் காட்டும் நாடகத் திறனைத்தான் பாருங் கள்.

இரண்டு உபமானங்கள்

இனி அடுத்த பாட்டிலே கோர நிகழ்ச்சியின் இரண்டு, மூன்று விவரங் களைத் தெரிந்து கொள்கிறோம்.

அரக்கியின் கதறல் காதில் விழுகி றது. அந்த வயிற்றைப் பீறி யெழும் அனும வடிவம் மேலே வானவீதியில் கண்ணுக்குப் படுகிறது:

குள்ளே புகுந்து அந்தக் கொழுத்த பாம்பு களைத் தூக்கிக் கொண்டு வெளிப்பட்டு மேலே பறக்கின்றதாம்.

இது அங்காரதாரையின் குடலுடன் அனுமன் மேலெழுந்த வைபவம். அந்தக் குடல் கீழே தொங்க வாலுடனே அனுமன் வானத்தில் காணப்படுவதற்கு வேறொரு உபமானமும் வருகிறது.

இந்தக் கள்வாயும், அந்தக் கள்வாயும்

இந்த இரண்டாவது உபமானத்தை அறிந்து கொள்வதற்கு முன், இந்தக் 'கள் வாய் அரக்கி'யை நன்கு கவனிப்போம். தன் கடலகத்திற்குள்ளிருந்து இரை தேடக் கிளம்பும் போதே கள்ளைப் பருகிக் கொண்டுதான் கிளம்பினாளாம்.

'அறத்தை அருளோடும் தின்ற'வாய், கள் வழிந்த தோற்றத்துடன், அந்தக் கள் வெறியுடன் தானே, உரையாடிற்றும் ஸ்ரீ ராமதூதனுடன். அதட்டிப் பயமுறுத்தப் பார்த்தது; இவனையும் தின்று தீர்க்கப் பார்த்தது.

இந்தக் கள்வாய் கதறக் குடல் கொண்டு வான வீதியில் தோன்றுகிறானும் அனுமன், பாம்புகளைத் தூக்கிக்கொண்டு மேலெழுந்த கருடன் போலே.

இச் சந்தர்ப்பத்தில் வேறொரு கள் வாயும் நினைவிற்கு வருகிறது. வேடர் தலைவனான குகனும் கள்வாயனாகத்தான் ராமன்முன் தோன்றினான்.

அந்த நாற்றத்துடனேயே வந்து தோன்றினானும், ஆசார சீலர்களான முனிவர் பெரு மக்கள் வசித்த புனித ஸ்தலத்திலே.

தோணியில் கங்கை தாண்டி வந்தும் கள்வாய் கழுவி வந்தானில்லை.

அவனைச் சகோதரனாகக் கொண்டான் ராமன். காரணம், அவன் அன்பு. இந்தக் கள்வாயோ, அன்பு கொன்று அறத்தை அருளோடும் தின்றதல்லவா?

இனி, வாலும் தானுமாய் அனுமன் வானத்திலே தோன்றக் குடல் கீழே தொங்கும் காட்சிக்குக் கவிஞன் காட்டும் வேறொரு உபமானத்தையும் நோக்குவோம்.



பையனும் காற்றுடியும்

காற்றுடிப் பட்டம் விடவேணு மென்று ஆசைப்பட்ட சிறுவன், வால் கட்டிய காற்றுடி யொன்றை எடுத்தான். நூற் கயிற்றிலே கட்டினன். அந்த நூற் கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டான். உருண்டையி லிருந்து சிறிது சிறிதாகக் கயிற்றை விட்டுக் கொண்டு வந்தான். காற்று நன்ருக வீசியது. பட்டம் நன்ருகப் பறந்தது.

திடீரென்று பெருங்காற்று வீசத் தொடங்குகிறது. கயிறு அறுந்து போகிறது. பையன் அப்படியே விட்டு விட்டு வீட்டுக்குப் போய் விடுகிருன்.

இப்பொழுது காற்றுடியின் நிலைமை என்ன? நூலுருண்டை கீழே உருண்டு கிடக்கிறது. வால் கட்டிய காற்றுடி மேலே வானத்திலே காணப் படுகிறது. அங்கே யிருந்து தொங்குகிறது அறு பட்ட மிச்சக் கயிறு பூமியை நோக்கி.

இந்த உபமானம் செய்யுளில் ஒரு பாதி, மற்றப் பாதி முன் பகுதி; அனும னுக்கு இக் காண்டத்திலே சீதாபிராட் டியின் அருளால் கிடைக்கப் போகும் சிரஞ்சீவிப் பட்டத்திற்கு இவனைக் காட்டிலும் தகுதி வாய்ந்தவர் வேறு யாருமில்லை என்பதை உய்த்துணர வைக்கிறது.

சரி, செய்யுளையே பார்ப்போம். செய் யுட் கண்ணுடியில் கயிறு அறுபட்ட காற்றுடி போலத் தோன்றும் சிரஞ்சீவி யையும் காண்போம்:

சாகா வரத்தலைவ—
  ரில்திலகம் அன்னுன்,
ஏகா, அரக்கிகுடர்
  கொண்டுடன் எழுந்தான்,
மாகால் அசைப்பவடம்
  மண்ணினுற வாலோ(டு)
ஆகாயம் உற்றகத —
  லிக்குவமை யானுன்.

[சாகா வரத் தலைவர் — சிரஞ்சீவிகள். திலகம் அன்னுன் — திலகமாய்த் திகழப் போகும் அனுமன். ஏகா — ஏகி; (அரக்கி வாய்க்குள்ளே) போய். மாகால்—பெருங் காற்று. அசைப்ப — (இங்கே) வீச. வடம் — நூல் வடம். மண்ணின் உற— மண்ணிலே பொருந்தப் பார்க்க. கதலி — காற்றுடி.]

முடிந்துக் காட்டும் கலைச் சிறப்பு

இனி, முடிவான ஒரு பயங்கர விவ ரம் சொல்லிக் காட்சியை முடிக்க வேண் டியதுதான். ஆனல் இடையே வேருெரு காட்சி குறுக்கிட்டு 'ஆறுதல்' தருகிறது.

ஆர்த்தனர்கள் வானவர்கள்,
  தானவர் அழுங்கா
வேர்த்தனர்; விரிஞ்சனும்
  வியந்துமலர் வெள்ளம்

தூர்த்தனன்; அகன்கயிலை—
  யில்துயிலி லோனும்
பார்த்தனன்; முனிந்தலைவர்
  ஆசிகள் பகர்ந்தார்.

[ஆர்த்தனர்கள் - ஆரவாரித்தார்கள். தானவர் - அசுரர்கள். அழுங்கி - மனம் வருந்தி. விரிஞ்சன் - பிரம்ம தேவன். மலர் வெள்ளம் தூர்த்தனன் - மலர் மாரியை வெள்ளமாய்ப் பொழிந்து விட் டான். அகன் கயிலையில் துயிலிலோனும் - அகன்ற கயிலையங்கிரியில் உறக்கம் இல்லாத ஸம்ஹாரக் கடவுளும்.]

இனி, கோரக் காட்சியைப் பூர்த்தி செய்கிருன் கவிஞன்:

மாண்டாள் அரக்கிஅவள்
  வாய்வயிறு காறும்
கீண்டான் இமைப்பினிடை....

[வயிறு காறும் — வயிறு வரையிலும். கீண்டான் — கிழித்து விட்டான். இமைப்பினிடை—ஓர் இமைப் பொழுதி னுள்ளே.]

கோர விவரங்களை யெல்லாம் ஒரு சேரக் குவித்துக் காட்டி ரவிகர்களை மனம் அழுங்கிப் புழுங்கச் செய்து, 'இதுவே எதார்த்த வாதம்!' என்று குதிபோடும் கலைஞர்களை நாம் அறி வோம். ஆனல் கொலையும் கலையாயிற்று, உண்மைக் கலைஞனின் கலைத் திறனல், மனேபாவ மகிமையால். 'கள்வாய் அரக்கி' கதறி உணர்த்தும் உண்மை இது.



394. ராம நாமத்தின் மகிமை

நில யாத்திரை, கடல்-யாத்திரை என்று தான் யாத்திரை செய்தார்கள் அந்தக் காலத்திலே. ஆகாச யாத்திரைகளெல்லாம் பௌராணிகர்களின் கதையில் தான்; கவிஞர்களின் கனவில் தான்.

அத்தகைய மானஸ யாத்திரைகளிலே புஷ்பக விமானத்திலும் பறக்க முடியும்; மந்திரக் கம்பளத்திலும் பறக்கக்கூடும்; சிறகடித்தும் பறந்து போகலாம். சிறகில்லாமலே அனுமனைப் போலவும் பாய்ந்து பறக்கலாம், வானக் கடலை நீந்திக் கடக்கலாம், தாவிப் போகலாம்.

இன்றோ ஆகாச யாத்திரை மானஸ யாத்திரையில்லை. நில யாத்திரை கடல் யாத்திரைகளுங் கூட ஆகாச யாத்திரையாக நடைபெறும் காலம் இது.

கடல் தாவு படலங்களும் நிலம் தாவு படலங்களும் காவிய உலகத்திலிருந்து காரிய உலகத்துக்குத் தாவி விட்டன. நமது சென்னை அமைச்சர்களும் ஒரு சமயம் ஹனுமானில், (ஹனுமான் என்ற பெயருள்ள விமானத்தில்) பறந்ததாகவும் தெரிந்து பூரித்தோமே!

ராமாயண அனுமனின் ஆகாச யாத்திரையோ இன்றைய விமான ஹனுமார்களின் யாத்திரைகளுடன் ஒப்பிடத் தக்கதன்று. மகா கவிகளின் கற்பனையுலகில், இதிகாச உலகில், 'தெய்வமாக் கவிதை' யென்ற திவ்ய உலகில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.

அந்த மகத்தான பொற்கனவு—லோகத்திலே வால்மீகி கண்ட காட்சி வேறு; கம்பன் கண்ட காட்சி வேறு.

மூன்று சித்திரங்கள்

இப்போது அனுமனது ஆகாச யாத்திரையின் இறுதிக் காட்சியை வால்மீகியிலிருந்து கம்பன் எப்படி மாறுபட்டு வருணிக்கிறான் என்று பார்க்கலாம். ராமாயணச் சுருக்கமாகிய சம்பு ராமாயணத்திலும் இப் பகுதியை நோக்குவோம்.

சுரசையையும் ஸிம்ஹிகையையும் வென்ற சுபசகுனத்தால், தான் உத்தேசித்துச் செல்லும் காரியம் கைகூடும் என்ற மகிழ்ச்சியுடன், அனுமன் கருடனைப் போல் வான வீதியில்

சென்று இலங்கையை அடைந்ததாக வால்மீகி முனிவர் காட்டுகிறார். கம்பனோ, ராமநாமத்தின் மகிமையால் அனுமன் உடனே இலங்கை கண்டதாகக் கூறுகிறான்.

போஜ மன்னன் இயற்றியதாகச் சொல்லப்படும் சம்பு ராமாயணத்திலே, அனுமன் அணுவிற் சிறிய உருவங் கொண்டு சுரசையின் வாயில் புகுந்து வெளிப்படுகிறான். அது, திருமால் முதலில் வாமன உருவங் கொண்டு மகாபலியிடம் மூவடி மண் பெற்றுத் திரிவிக்கிரமனாக விரைந்து வளர்ந்தது போல் இருந்ததாகக் கவி கூறுகிறான். ஸிம்ஹிகை



வதத்திலே நரசிம்மாவதாரத்தை நினைப்பூட்டுகிறான்.

அனுமன் வானத்தில் சூரியன் போலச் செல்லுகையில், கோபமுண்டாகும்படி நிழலைப் பிடித்து இழுத்தாள் ஸிம்ஹிகை என்னும் அரக்கி. அவளது உடலை, நரசிம்ம மூர்த்தி இரணியனது உடலை நகத்தினால் கிழித்தெறிந்தது போலக் கிழித்தெறிந்து விட்டு அப்பால் சென்றான் என்கிறது சம்பு ராமாயணம். இதை நினைப்பூட்டுகிறது, 'பெரிய கோளரி பெயர்த்தான்' என்று கம்பன் கூறுவது.

பிறகு அனுமன் இலங்கையிலுள்ள ஒரு மலையின் சிகரத்தை யடைந்து நுண்ணிய உருவம் கொண்டு ஆலோசனை செய்தான் என்கிறது சம்பு ராமாயணம்.


இனி நாம், கம்பனின் அனுமன் பாக்கிக் கடலையும் தாவி இலங்கை சேர்ந்ததை விவரமாய்த் தெளிவாய்ப் பார்ப்போம்.

கம்பன் வேறுபாடு

அங்காரதாரையைக் கொன்ற பின் அனுமன் மிக்க உயரத்திலே மனோ வேகத்தினும் விரைவான வேகத்தில் சென்றானும் :

மாண்டாள் அரக்கிஅவள்
　வாய்வயிறு காறும்
கீண்டான், இமைப்பினிடை
　மேருகிரி கீழா
நீண்டான், வயக்கதி
　நினைப்பின் நெடிதென்னப்
பூண்டான், அருக்கனுயர்
　வானின்வழி போனான்.

[வாய் வயிறுகாறும் — வாய் வயிறு வரையிலும். கீண்டான் — கிழித்தவனான அனுமன். இமைப்பினிடை — ஓர் இமைப்பொழுதினுள்ளே. மேருகிரி கீழா — மகாமேரு மலையும்



ழாகுமாறு. நீண்டான் — நீண்டு; (இங்கே) உயர்ந்து. வயக்கதி — வலிய வேகத்தை. நினைப்பின் கெடிதென்னப் பூண்டான் — நினைப்பின் வேகத்திலும் அதிகமாயிருக்குமாறு தரித்துக்கொண்டு. அருக்கன் உயர்வானின் வழி — சூரியன் செல்லுகிற உயர்ந்த வானவீதியிலே.]

எனினும் வால்மீகி சொல்லுகிற வெற்றிக் குதூகலமோ மகிழ்ச்சியோ அனுமனுள்ளத்தில் ஏற்படவில்லையாம். மைநாகரால் வந்த இடையூறு, தேவ சோதனையால் வந்த இடையூறு என்ற இரண்டையும் தாண்டிக் கடைசியாகச் சத்துருவால் விளைந்த மூன்றாவது இடையூற்றுக்கும் இடையூறாகி வெற்றி சூடியும், இத்தகைய வெற்றிகளெல்லாம் அளித்திருக்கக் கூடிய மகிழ்ச்சி கம்பனுக்குப் போதுமென்று தோன்றவில்லை, அனுமனை அக்கரையில் கொண்டு சேர்ப்பதற்கு.

ஆகாச யாத்திரை பூர்த்தியாகி விட்டதென்றே இன்னும் அனுமனுக்குத் தோன்றவில்லையாம். மேலே வானவீதி வரம்பின்றி நீண்டு கொண்டே போகிறது. கீழே கடலும் முடிவற்றுக் கிடப்பதுபோல் வளர்ந்து பொங்குகிறது. இடையூறுகளும் அலைமேல் அலையாகப் பொங்கி வருவது போலத் தோன்றுகிறது.

ஒன்று, இரண்டு, மூன்று — இன்னும் எத்தனையோ? இந்த இடையூற்றுக் கடலைத் தாண்டிக் கரையேறுவது எப்படி?


இவ்விதமாக நினைக்கும் அனுமன் எல்லாத் துன்பங்களுக்கும் ஒரு சஞ்சீவி கண்டுபிடிக்கிறான்:

'ஊறுகடி(து) ஊறுவன,
ஊறில்அறம் உன்னாத்
தேறலில் அரக்கர்புரி
தீமை அவைதீர,
ஏறும்வகை எங்குள?
இராமவென எல்லாம்
மாறும்,அதில் மாறுபிறி(து)
இல்'என மதித்தான்.

[ஊறு — இடையூறுகள். கடிது — விரைவில். ஊறுவன — நேர்கின்றன. ஊறில் அறம் உன்னா — கெடுதல் இல்லாத தர்மத்தை நினையாத. தேறலில் — தெளிந்த அறிவு இல்லாத. அரக்கர் புரி — அரக்கர்கள் செய்கின்ற. ஏறும் வகை — கரையேறும் விதம். எங்குள — எங்கே உள்ளன. அதில் மாறு பிறிது இல் — அதைக் காட்டிலும் வேறான உபாயம் ஒன்றும் இல்லை.]

நம்பிக்கையின் அற்புதம்

வெற்றிப் பெரு மகிழ்ச்சியே வேறு இடையூறு இல்லாமல் அனுமனை இலங்கை சேர்த்துவிட்டதாக வால்மீகி ராமாயணம் வெளிப்படையாகவும், சம்பு ராமாயணம் குறிப்பாகவும் சொல்லியிருக்க, கம்ப ராமாயணமோ அனுமன் தன் சக்திகொண்டு பூர்ண வெற்றி பெற முடியாது என்பதாகத் தெளிந்து பக்தி



யின் சக்தியையே நம்புவதாய்க் காட்டுகிறது.

இப்படி நம்பி இறைவனது நாமம் சொல்லி அந்தப் பலத்தால் போகிருனும் இப்போது.

ஓடினேன் ஓடி,
உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம்
தெரிந்து,
நாடினேன் நாடி
நான்கண்டு கொண்டேன்,
நாராய ணாவென்னும்
நாமம்

என்ற திருமங்கை யாழ்வாரின் நிலையை அனுமனும் அடைந்து ராம நாம ஸ்மரணமே தக்க உபாயமென்று கண்டு கொண்டானும்.

ஓடி ஓடிப் பார்த்தும் அந்த ஆற்றல் போதாதென்று நாராயண நாமத்தையும் அதன் மகிமையையும் கண்டு அந்தத் துணையைப் பற்றிக் கொண்டதாகப் பாடுகிருர் ஆழ்வார் :

நற்றுணை யாகப்
பற்றினேன் அடியேன்
நாராய ணாவென்னும்
நாமம்.

கடல் தாவி ஓடி வந்த அனுமனும் ராம நாமத்தையே நற்றுணையாகப் பற்றி இலங்கை சேர்ந்தானென்பது கம்பன் கதை.

'இராமவென எல்லாம் மாறும்' என்று கம்பனின் அனுமன் கருதுவது திருமங்கையாழ்வாரின் எதிரொலிதான் :

குலம்தரும், செல்வம்
தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின
எல்லாம்

நிலந்தரம் செய்யும்,
நீள்விசும்(பு) அருளும்,
அருளொடு பெருநிலம்
அளிக்கும்,

வலம்தரும், மற்றும்
தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின
செய்யும்

நலம்தரும் சொல்லை
நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும்
நாமம்.

[விசும்பு — வானம். வலம் — பலம்.]

நாராயண நாமம் அளித்த பலம் கொண்டு வாழ்ந்தவர் ஆழ்வார். ராம நாம பலம் கொண்டு இலங்கை காண்கிருன் அனுமன் என்று செய்தி சொல்லும் கவிஞன், தனக்குள்ள ராம பக்தியையும், ஆழ்வார் கொள்கையிலுள்ள திட நம்பிக்கையையும் வெளியிடுகிருன்.

ராம நாம பாராயணத்தில் கம்பனுக்குள்ள நம்பிக்கை சுந்தர காண்டத்தின் தொடக்கத்தில் இங்கே வெளிப்படுவது போல், கிஷ்கிந்தா காண்டத்தின் இறுதியிலும் வெளிப்பட்டது. ராம நாம பாராயணம் செய்த மாத்திரத்திலே ஸம்பாதிக்குச் சிறகு முளைத்த கதையைத்தான் நினைப்பூட்டுகிருேம்.

ஸம்பாதி வானருடன் பேசிக்கொண்டிருக்கும் போதே முன்பு சூரிய கிரணங்களால் எரிந்து போன சிறகுகள் அந்த வானரர்களுக்கு எதிரே மறுபடியும் முளைத்தன என்கிருர் வால்மீகி. ஒரு மகரிஷியின் அனுக்கிரகத்தாலும் தபோமகிமையாலும் இழந்த சிறகுகளை மீண்டும் பெற்றுக் கொண்டதாகச் சொல்லுகிருன் வால்மீகியின் ஸம்பாதி. கம்பனுடைய ஸம்பாதியோ வானரர்களை நோக்கி, 'நீங்கள் எல்லாரும் என்னைச் சூழ்ந்து நின்று கொண்டு ராம நாம ஸ்மரணம் செய்யுங்கள்' என்று வேண்டிக் கொள்கிருன். அவர்களும் அப்படியே செய்ய உடனே சிறகுகள் முளைத்து வளர்ந்து விட்டனவாம். அந்தப் பாராயண கோஷ்டியில் நமது அனுமனும் ஒருவன். வால்மீகியில்அனுமனின் சக்திக்கு வெற்றி; இங்கே இறுதி வெற்றி அனுமனின் சக்திமயமான பக்திக்கும் நம்பிக்கைக்கும்.

ராம நாமத்தைச் சொன்னதுதான் தாமதம், உடனே இலங்கை தோன்றி விடுகிறதாம். பசுமையான சோலைகளையுடைய ஒரு பவளமலையை நோக்கிப் பாய்கிருன் அனுமன்.



395. ‘இலங்கையைத் தெரியக் கண்டான்’

வானமே தெரியக் கண்டான்; தென் கடலும் தெரியக் கண்டான். இலங்கை காண்போமா? இடையூறுகளையேதான் கண்டு கொண்டிருப்போமா? ராம நாம மகிமையும் தெரியக் கண்டிருந்தவன், இப்போதும் ராம நாம உச்சாரணம் செய்து பார்த்தான்.

அச் சமயம் அனுமன் மேலோங்கித் தேவலோகத்தைச் சமீபித்து அந்த வான வழியிலே போய்க் கொண்டிருந்தான்.

வானேற வழிதந்த
  வாட்டாற்றான் பணிவகையே
நானேறப் பெறுகின்றேன்,
  நரகத்தை நகுநெஞ்சே!

[வாட்டாற்றான் – திருவாட்டாறு என்ற தலத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமான். நகு – சிரி.]

என்ற பெரியாரின் நிலையை அடைந்து விட்டான் சிறிய திருவடி.

ராம நாமத்தை உச்சரித்ததும், உடனே கீழே பார்க்க இலங்கை தெரிவதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

பொன்மயமான குடம் போன்ற கோபுர கலசங்களுடன், பலவகை இரகஸ்யப் பொறிகளின் காவலோடு கோட்டை மதில் கிடக்கிறது கீழே. அனுமன் அப்படியே அந்த மதிலின் மேல் இறங்கி யிருக்க முடியும்.

ஆனால் சூரியன் அஸ்தமிக்கப்போகும் அந்த வேளையில் அந்த ஜொலிக்கும் மதில் மீது அனுமனுடைய கண்பார்வை கூட ஊன்றி நோக்க முடியவில்லையே! அப்படியே அந்த மதில்மேல் இறங்கியிருந்தாலும் என்ன தீங்கு நேரக் கூடுமோ? எவ்வகைக் கொலைப் பொறிகள — காவல் யந்திரங்கள் — எவ்வாறு மறைந்து காக்கின்றனவோ ராவணேச்வரன் கோட்டையிலே?

கண்ணும் கருத்தும் கூச, அனுமன் ஜாக்கிரதைப்பட்டு மதிலுக்கு இப்பாலுள்ள பவளமலையிற் பாய்கின்றான்:

நசும்புடைக் கனக
  நாஞ்சிற் கடிமதில்
    நரித்து நோக்கான்,
அசும்புடைப் பிரசத்
  தெய்வக் கற்பக
    நாட்டிடை அண்மி
விசும்பிடைச் செல்லும்
  வீரன், விலங்கிவே(று),
    இலங்கை மூதூர்

பசுஞ்சுடர்ச் சோலைத்(து)
ஆங்கோர் பவளமால்
வரையிற் பாய்ந்தான்.

[தசும்பு — குடம்; (இங்கே) கோபுரம் முதலிய இடங்களில் அமைக்கும் குடம் போன்ற உறுப்பாகிய கலசம். உடை — உடைய. கனக நாஞ்சில் — பொன் மயமான நாஞ்சில் என்னும் மதில் உறுப்பு. 'கனகம்' தசும்பு என்ற கோபுர கலசத்திற்கும் அடைமொழி. நாஞ்சிற் கடி மதில் — நாஞ்சில் என்னும் உறுப்பையும் உடைய காவலுள்ள மதில். தரித்து நோக்கான் — தங்கி நோக்காதவனாய். அசும்பு — ஊற்று. அசும்பு உடை — ஊற்றையுடைய; ஊற்றெடுத்துப் பாய்கிற. பிரசம் — தேன். தெய்வக்



கற்பக நாட்டை — தேவ லோகமாகிய, கற்பகமரங்களோடு கூடிய, பிரதேசத்தை. அண்மி — சமீபித்து. விசும்பிடை — ஆகாச மார்க்கமாக. விலங்கி வேறு—நேரே செல்லாது சிறிது விலகி. இலங்கை மூதூர்—இலங்கையென்ற அந்தப் பழைய நகரத்தின். பசுஞ்சுடர்ச் சோலைத்து — பசுமையாகச் சுடர்கின்ற சோலைகளை உடையதாகிய. ஆங்கு — அங்கேயுள்ள. ஓர் பவளமால் வரையில் — ஒப்பற்ற பெரிய மலையில்.]

சூரியாஸ்தமனம் நெருங்கி விட்டதால் பசுமையான சோலைகள் பசுஞ் சுடர்ச் சோலைகளாகச் சுடர்கின்றனவாம். பவள மலையும் பசுஞ்சுடர்ச் சோலையும்-என்ன வசீகரமான வர்ண வேறுபாடுகள்!

மேலே வானவீதியில் சென்று கொண்டிருந்தான்; பளிச் சென்று அந்த வழியை விட்டு விலகி இந்த மலையில் பாய்ந்து விட்டான். விசையோடு பாய்ந்த அந்தப் பாய்ச்சலைத் தாங்க மாட்டாத பவளமலை அப்படியே அசைக்கப்பட்டு அங்கும் இங்குமாகத் தள்ளாடித் தன்னிடமுள்ள பொருள்களை அப்புறமும் இப்புறமுமாகச் சிந்தி விடுகிறதாம்.

கம்பனும் கப்பல் யாத்திரையும்

இம் மலைபடும் பாட்டுக்கு ஓர் உவமையாகிறது, கடலிடையே உயர்ந்த பெரிய மரக்கலம் ஒன்று புயற்காற்றினால் தாக்கப் பட்டுத் தகர்ந்து தன்னிடமுள்ள பொருள்களைச் சிந்துகின்ற ஒரு காட்சி. நாம் தரித்து நோக்க வேண்டிய உவமை:

மேக்குறச் செல்வோன்
பாய விலங்கி, நீர்
இலங்கை வெற்பு

நாக்குறுத்(து) அங்கும்
இங்கும் தள்ளுற
நுடங்கு நோன்மை,
போக்கினுக்(கு) இடையூ-
றுகப் புயலொடு
பொதிந்த வாடை
தாக்குறத் தகர்ந்து
சிந்தும் கலமெனத்
தக்க தன்றே

[மேக்கு உறச் செல்வோன் — மேலோங்கிச் சென்றவனாகிய அனுமன். பாய விலங்கி — விலகிப் பாய. நீர் இலங்கை வெற்பு—கடல் நீர் சூழ்ந்த இலங்கையைச் சார்ந்த அந்தப் பவளமலை. நாக்குறுத்து — அசைக்கப்பட்டு. தள்ளுற நுடங்கு — தள்ளாடிச் சலிக்கின்ற. நோன்மை — தன்மை. புயலொடு பொதிந்த வாடை — பெரும்புயற் காற்று. போக்கினுக்கு — தான் போவதற்கு. தாக்குற — விசை கொண்டு தாக்க. கலம் — மரக்கலம். எனத் தக்கது — என்று சொல்லும்படி யிருந்தது. அன்றே — ஈற்றசை.]

சுந்தர காண்டத்தின் முதலாவது படலமாகிய இக் கடல் தாவு படலத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் கப்பல் யாத்திரையைக் குறிப்பிடுகிறான் கம்பன். வசதியாகத் திரைகடலோடித் திரவியம் தேடியோ, வெளிநாடுகளில் வெற்றி சூடியோ க்ஷேமமாய்த் திரும்பி வந்த அந்தக் கப்பல் யாத்திரையைக் குறிப்பிடவில்லை. அபாயமான யாத்திரைகளையே குறிப்பிடுகிறான்.



இங்கே புயற் காற்றினால் தகர்ந்த மரக்கலத்தைக் காண்கிறோம். இப் படலத்தின் எட்டாவது பாட்டிலே, கடலில் முழுகிப் போகும் மரக்கலத்தின் பாய்மரத்தைத்தான் பார்க்கிறோம். மரக்கலம் முழுகிய நீர்ப் பரப்பிலே நீர்க்

குமிழிகளையும் பார்க்கிறோம் — அந்த வாழ்வுக் குமிழிகள் போலவே!

பாய்மரக் கப்பல்களில், உறுதி கொண்ட நெஞ்சும் கடுமை கண்ட தோளுமாய்,

செந்தமிழ் நாட்டுப்
பொருநர் — கொடுந்
திக்கண் மறவர்கள்
சேரன்தன் வீரர்,—

கடல் கடந்து சென்று வெளி நாடுகளிலும் தமிழ்ப் பெருங் கொள்கைகளை விளைத்து வந்த காலம் அது. வாழ்ந்த பெருந் தமிழகம்—தாழ்ந்த தமிழகம் அன்று. அத்தகைய ஒரு மகோன்னத காலத்தின் உச்சத்திலே வாழ்ந்தவன் கம்பன்.

ஜாலக்கண்ணாடி, நிலைக்கண்ணாடி, மனக்கண்ணாடி

இனி, அனுமன் அந்தப் பவளமலையி லிருந்து இலங்கை கண்ட அந்த முதலாவது காட்சியை நாமும் அப்படியே காண்போம், கவிஞனது இந்திரஜால மகேந்திரஜாலக் கண்ணாடியிலே.

சூரியாஸ்தமன சமயத்திலே அந்தச் செங்கதிர்ச் சோதியிலே சோலை ஒரே பசுஞ் சுடர்ச் சோலையாகக் காண்கிறது. மாளிகைகளும் மேல் மாடங்களும் இரத்தின மயமான சுவர்களும் மதில்களும் கோபுரங்களும் விமான சிகரங்களும் பிறவும் அந்தப் பொன்னிறக் கதிர்களில் முழுகித் தகதகவென்று ஒரே அழகுக் கடலாய் ஜொலிக்கின்றன.

இந்தக் காட்சி எப்படியிருக்கிறது, சொர்க்க லோகத்தை உரசி வந்து இலங்கை மலையில் இறங்கி விட்ட அனுமனுக்கு? சொர்க்கலோகமாகிய பெண்மணி இங்கே ஒரு பெரிய நிலைக் கண்ணாடி வைத்துத் தன் பொன் மேனியை ஆசைதீரப் பார்த்துக் கொண்டிருக்கிறாளோ?

முதன்முதல் ராவணேச்வரனின் போகபூமியாகிய இலங்கையைக் கண்ணுற்றுக் கண்ணும் கூசிக் கருத்தும் கூசி வியந்த வியப்பை இதற்குமேல் பொருத்தமாக, இதற்கு மேல் விமரிசையாக யாரே வெளியிட முடியும்?

விண்ணிடை உலகம்
என்னும் மெல்லியல்
மேனி நோக்கக்
கண்ணடி வைத்த
தன்ன, இலங்கையைத்
தெரியக் கண்டான்.

[விண்ணிடை உலகம் என்னும் மெல்லியல்— விண்ணுலகமாகிய பெண். கண்ணடி—கண்ணாடி. வைத்தது அன்ன— வைத்தது போல் இருக்கிற.]

மூன்று லோகங்களிலும் உள்ள சிறந்த பொருள்களெல்லாம் இங்கே வடிகட்டி வந்திருப்பது போல் வந்திருக்கவேண்டும் என்று சிந்திக்கிறான்.

உலகத் தேர்களில் சூரியனது ஒளித் தேர் தவிர மற்ற உயர்ந்த தேர்களெல்லாம் இலங்கைக்கு வந்து சேர்ந்து விட்டனவாம். யானைகளிலோ பிள்ளையார் —யானை தவிர! இந்தச் சுரண்டல்— அழகு அனுமனது மனக் கண்ணாடிக்கும் எதிரே வாராமலிருக்க முடியுமா?

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியா பர்மா முதலான பல நாடுகளில் உள்ள சிறந்த செல்வங்களையும் உயர்ந்த அழகுப் பொருளையும் சீமையில் ஒரு சேரத் திரட்டி வைத்துக் கொள்ள வில்லையா? வைரங்களின் சக்ரவர்த்தியாகிய இந்தியக் கோஹினூர் பிரிட்டிஷ் மகுடத்தை அணி செய்யவில்லையா? மிகச் சிறந்த நடராஜ விக்கிரகங்களும் கோதண்டராம விக்கிரகங்களும் கூட ஆங்கிலச் சீமையில் அடைக்கலம் புகவில்லையா? இதே கதை தான் ராவண ஏகாதிபத்தியத்திலும்!

* * *

ஏ! கனமான இந்த மாலை வேளையிலே பவளமலையில் மறைந்து நின்று இலங்கை நோக்கும் அனுமன், சிற்பச் செல்வங்களாகிய மாட மாளிகைகளை நோக்கி எப்படித் திகைத்துப் போகிறான் என்பதை அடுத்த வாரம் காண்போம்.



396. கண் விருந்தும் செவி விருந்தும்

ஆரணிய காண்டத்திலேயே, தண்டகாரணிய வாசிகளான முனிவர்கள் இலங்கை அரக்கர்களை 'இரக்கம் என்றொரு பொருள் இலாத நெஞ்சினர்' என்று ராமனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள் எடுத்த எடுப்பிலே.

இலங்கையிலுள்ள பொருள் வளங்களை வருணித்து அரக்கர்களை அறிமுகப் படுத்துவது இயலாத காரியம். ஏனென்றால், பவள மலையில் அனுமன் நினைக்கிறபடி, மூன்று லோகங்களிலும் உள்ள பொருள்களும் 'வடிகட்டப் பெற்று' வந்து சேர்ந்திருக்கின்றன இலங்கையிலே:

உட்புலன் எழுநூ(று)
என்ப யோசனை;
உலக மூன்றில்
தெட்புறு பொருள்கள்
எல்லாம் இதனுழைச்
செறிந்த!

[உட்புலன்—உள்ளிடத்தின் அளவு. எழுநூறு என்ப யோசனை—எழுநூறு யோசனை என்று கூறுவார்கள் உலகம் மூன்றில் — மூன்று உலகங்களிலும். தெட்புறு பொருள்கள் எல்லாம்—(வடிகட்டித்) தெளிவாகப் பொருந்திய எல்லாப் பொருள்களும். இதனுழைச் செறிந்த — இந்த இலங்கையில் அடங்கியிருக்கின்றன.]

இத்தகைய இலங்கையில் உள்ள பொருள்களை 'ஜாப்தா' செய்வதைக் காட்டிலும் இல்லாத பொருள்களைக் குறிப்பிடுவது தானே எளிது? இல்லாத பொருள்களோ பலவும் அல்ல, சிலவும் அல்ல, ஒன்றே ஒன்றுதான்: இரக்கம் என்ற ஒரு பொருள்தான் இந்தப் பிரதேசத்திலே இல்லாத சரக்கு! இப்படித் தண்டகாரணிய முனிவர்கள் முன்கூட்டியே அறிந்து சொல்லி வைத்தது போல், இப்போது அனுமனுள்ளத்திலும் சிந்தனைகள் பாய்ந்திருக்கக் கூடும்.

ஆனால் இக்கருத்திலே அனுமனுள்ளம் இப்போது ஊன்றித் தரித்து நிற்க வில்லையென்பது தெளிவு. பவள மலையிலிருந்தபடியே திரிகூடகிரி மேலுள்ள இலங்காபுரியின் வளங்களையும் வனப்பு

களையும் பார்த்துத் திகைத்துக் கொண்டிருக்கும் நிலையில், ராவண ராஜ்யத்தின் சூறையாடல்-கொள்கையை ஊன்றித் தரித்து நோக்குவதற்கு அவகாசம் ஏது?

மாளிகைகள் என்ற மணிமாலை

மலையின் மேடு பள்ளங்களிலும் பல தினுசான மாளிகைகளைப் பார்த்தான். சில மாளிகைகளைப் பார்த்து, 'பொன்னைக் கொண்டு இழைத்தவை இவை!' என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான்.

வேறு சில மாளிகைகளை நோக்கி, 'அவை இரத்தினங்களைக் கொண்டு பொதிந்திருக்கின்றன!' என்று தீர்மானிக்கிறான். 'அதோ, கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த அம்மாளிகைகள் பொன்னாலும் மணியாலும் அமைந்தன வல்ல; மின்னலைக் கொண்டே அமைக்கப்பட்டிருக்க வேண்டும்!' என்று அதிசயிக்கிறான்.

வேறு சில மாளிகைகளைக் கண்குளிர நோக்கி, 'இவை இந்த மாலை வெயிலின் மோகன மத்தாப்பு வெளிச்சத்தைக் கொண்டே செய்யப்பட்டிருக்க வேண்டும்!' என்று மயங்குகிறான்.

இன்னும் சில வீடுகளும், உபரிகைகளும் எதைக் கொண்டு எவ்விதமாகச் செய்யப் பெற்றிருக்க வேண்டும் என்பதே தெரிய வில்லையாம்:

பொன்கொண் டிழைத்த,
  மணியைக்கொடு பொதிந்த;
மின்கொண் டமைத்த!
  வெயிலைக்கொடு சமைத்த!
என்கொண் டியற்றிய
  எனத்தெரி கிலாத!
வன்கொண்டல் விட்டுமதி
  முட்டுவன மாடம்!

[மணி—இரத்தினம். கொடு—கொண்டு. மின்—மின்னல். வெயில்—மாலைவெயில். தெரிகிலாத—தெரிய முடியாமல் இருக்கின்றன. வன் கொண்டல்—வலிய மேகங்கள்: (இங்கே) மேக மண்டலம். மதி—சந்திரன்; சந்திர மண்டலம். மாடம்—மாட மாளிகைகள்.]

இந்த விதமாகப் பிரமித்துக்கொண்டிருக்கும் அனுமன், தன் விசுவரூபக் கண்களுடன் இந்த மாளிகைகளை மேலுலகமாகிய தேவலோகத்து மாளிகைகளுடனும், கீழுலகமாகிய நாகலோகத்து மாளிகைகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். இந்த அழகும் ஆடம்பர அதிகார வைபவங்களும் எங்கே, அந்த அழகு ஆடம்பரம் முதலியன எங்கே?


நாகா லயங்களொடு,
  நாகருல கும்,தம்
பாகார் மருங்குதுயில்
  வென்ன,உயர் பண்ப;
ஆகாயம் அஞ்சஅகல்
  மேருவை அனுக்கும்
மாகால், வழங்குசிறு
  தென்றல்வர, நின்ற.

[நாகாலயங்களொடு—தேவலோகத்து மாளிகைகளுடன். நாகருலகும்—நாகலோகமும்; பாதாள லோகமும்; பாதாள லோகத்து மாளிகைகளும். தம் பாகு ஆர் மருங்கு—தம் பாகமாய்ப் பொருந்திய இடங்களிலே. துயில்வு என்ன—இனிது உறங்குவன என்னுமாறு. உயர் பண்ப—(இந் நகரத்து மாளிகைகள்) உயர்ந்த தன்மையுடையன; மிகச் சிறந்துள்ளன. அகல் மேருவை அனுக்கும்—அகன்ற மேரு மலையையும் வருந்தச் செய்யும். மாகால்—பெரும்புயற் காற்று. வழங்கு—இனிதாக இயங்குகின்ற. சிறு தென்றல்—இளந் தென்றற் காற்றாக. வர—தவழ்ந்து வரும்படி.



கின்ற — இலங்கை மாளிகைகள் கின்றன.]

அனுமனது விசுவரூபக் கண்களுக்கு ஒரு கோவை அல்லது ஹாரம்போலத் தோன்றுகின்றன, மேலுலகத்து மாளிகைகளும் கீழுலகத்து மாளிகைகளும் இடையேயுள்ள இலங்கை மாளிகைகளும். மணிமாலை ஒன்றிலே நடுநாயகமாக அமைந்துள்ள மிகச் சிறந்த இரத்தினத்தின் அழகு மிகுதியாலும் சோபை மிகுதியாலும் அதை அடுத்திருக்கும் வேறு இரத்தினங்கள் ஒளி குன்றி அழகு குன்றி ஒரு மாதிரி 'தூங்கு மூஞ்சி'கள் போல் ஆகிவிடக் கூடுமல்லவா? அப்படியாகி விட்டனவாம் மேலுலகத்து மாளிகைகளும் கீழுலகத்து மாளிகைகளும், நடுநாயகமான இலங்கை மாளிகைகளுடன் சேர்த்துப் பார்க்கும் போது.



அடிமைகளும் எஜமானிகளும்

அழகு வளம் இப்படியிருக்க, ஆடம்பர அதிகார தோரணை எப்படியிருக்கிறது தெரியுமா? ஆகாயத்தையும் மலையையும் ஒருங்கே நடுங்கச் செய்து கொண்டு வீசி வரும் கடும் புயற் காற்றும் இந்த இலங்கை மாளிகைகளுக்கு வந்ததும் நடு நடுங்கிச் சிறு தென்றலாகித் தவழ்ந்து தான் வர வேண்டியிருக்கிறதாம்.

பஞ்சாப் படுகொலை நடந்த தடபுடலில் மக்கள் எண் சாணுடம்பும் ஒரு சாணாய்க் குறுகி மார்பினால் ஊர்ந்து தவழ்ந்து சென்ற கதை இன்னும் கோரமாக நினைவில் இருக்கிறதல்லவா?

கடல் தாவு படலம் முற்றுப்பெற்று, அடுத்த ஊர்தேடு படலத்தில் அடி வைத்ததும் இரண்டாவது பாட்டின் பிற்பகுதியிலேயே ராவண ராணுவ மகாராஜ்பத்தின் அதிகாரத் திமிரை உணர்ந்து கொள்கிறோம்.

ஆகாய மஞ்ச அகல்
மேருவை அனுக்கும்
மாகால், வழங்குசிறு
தென்றல்வர, நின்ற!

என்ற அடிகளைப் பாடிப் பார்க்க வேண்டும்.

'நாகாலயங்களொடு, என்று தொடங்கும் இம்



முழுப் பாட்டையும், 'பொன் கொண்டிழைத்த' என்று தொடங்கிய வருணனைப் பாட்டுடன் சேர்த்துப் பாடிப் பாடிப் பார்க்க வேண்டும். அதே வசீகரத்தை இம்மூன்றாவது பாட்டிலும் பார்க்கலாம் :

மாகாரின் மின்கொடி
  மடக்கினர் அடுக்கி,
மீகாரம் எங்கணும்
  நறுந்துகள் விளக்கி,
ஆகாய கங்கையினை
  அங்கையினின் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர்
  விசுபடு காரம் !

[மாகாரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி — பெரிய கானமேகங்களில் தோன்றும் மின்னற்கொடிகளை மடக்கி அடுக்கித் தொகுத்துத் துடைப்பக் கற்றை அல்லது வார்கோலாகக் கொண்டு. மீகாரம் — மேற்பக்கம். எங்கணும் — எங்கும். நறுந்துகள் விளக்கி — சுகந்தப் பொடிகளை விளக்கித் தள்ளி. அங்கையினின் அள்ளி — அழகிய கைகளால் முகந்து. பாகாய செஞ்சொலவர் — கருப்பஞ்சாற்றின் பாகு போன்ற இனிய சொற்களை உடைய குற்றேவல் மகளிர். வீசுபடு — வீசப்பட்ட ; தெளிக்கப்பெற்ற. காரம் — வீடுகள்.]

இலங்கையிலுள்ள ஒவ்வொரு ராட்சஸ மாளிகையும் ஒரு குட்டி ராவணன்—கோட்டை போலவும் ஒரு குட்டி அரண்மனை போலவும் காணப்படுகிறதாம். இம் மாளிகைகளில் 'சிலதியர்' என்ற குற்றேவல் மகளிர்கள் மாலைப் பணிவிடை செய்ய ஆரம்பிக்கின்றனர். வானுலகப் பெண்மணிகளே இப்படி வந்து அடிமை செய்வதாக ஊகிக்கலாம்.

வானவர் மகளிரானதால் மேகத்து மின்னல்களையே பிடித்துத் தொகுத்து அந்த விளக்குமாறு கொண்டு குப்பை கூட்டுகிறார்களாம். ஆகாச கங்கையை அள்ளி நீர் தெளிக்கிறார்களாம்.

அவர்கள் கூட்டி ஒதுக்கித் தள்ளும் குப்பையைத் தான் பாருங்கள். அந்த மாளிகைகளிலே சிந்தியிருக்கிற வாசனைப் பொடிகள் ஒழிய வேறு தூசியே அங்கு இல்லையாம். பூக்களின் மகரந்தப் பொடி, சந்தனப் பொடி, கதம்பப் பொடி முதலியனவே கூட்டி ஒதுக்க வேண்டிய குப்பை !

இந்த அடிமைப் பெண்கள் வேலை செய்யும்போதே பேசிக் கொள்கிறார்களாம். அடிமைகளின் துயரக் குரல் தான் ; ஆனால், என்ன சொல்லினிமை ! 'பாகாய செஞ்சொலவர்' என்ற சொற்றொடரின் குறிப்பு இது.

கீட்ஸ் முதலான கவிகளும் நாணிக் கோணிப்போக வேண்டியதுதான் இம் மனோபாவம் கண்டு !

இனி, மாளிகைகளின் வருணனைப் பாடல்களான இம் மும்மணிகளையும் மீண்டும் மீண்டும் பாடிப் பார்த்து விட்டு மேலே செல்ல வேண்டும். மேலே சொன்ன விதமாகத் தெய்வப் பெண்கள் பணி செய்ய, எஜமானிகளில் சிலர் என்ன செய்கிறார்கள் ?

அனுமன் பார்க்கிறான். நாமும் தான் பார்க்கிறோம் அதோ அந்த மகளிரை ;

குழலும் வீணையும்
  யாழும்என்(று) இனையன
        குழைய
மழலை மென்மொழி
  கிளிக்(கு)இருந்(து) அளிக்
  மகளிர்   [கின்ற

[குழல் — புல்லாங்குழல். இனையன — இப்படிப்பட்ட இன்னிசைக் கருவிகள். குழைய — தோற்கும்படி. மழலை மென்மொழி — மிகவும் இனிமையான தங்கள் மழலைச் சொற்களை. அளிக்கின்ற — அன்போடு கற்றுக் கொடுக்கிற. மகளிர் — பெண்கள்.]

தாம் வளர்க்கும் கிளிப்பிள்ளைகளுக்கு எவ்வளவு அன்புடன் கொஞ்சும் குரலில் பாடம் கற்பிக்கிறார்கள்! மகா ரஸிகனான அனுமனே அந்த சாரீர சம்பத்தையும் ரூப சம்பத்தையும் கூடப் பாராட்டுகிறான்.

அனுமனது விசுவரூபச் செவிகளுக்கும் கண்களுக்கும் ஒரே விருந்து. இலங்கை மாளிகைகள் என்ற அழகுக் கடல்.



397. அரக்கரும் பெரியவர்கள்!

விசுவரூபக் கண்கள் பவள மலையிலிருந்தபடியே இன்றைய சோதனை விளக்குகள் போல் பளிச்சுப் பளிச்சென்று இலங்கையை ஒருவாறு ஸ்தூலமாகச் சோதித்துப் பார்க்கத் தொடங்கிவிட்டன.

விசுவரூபச் செவிகளோ, கிளிப் பிள்ளைகள் தங்கள் 'மழலை மென்மொழி'களை எங்கேயிருந்துதான் கற்று வருகின்றனவோ என்ற புதிருக்கு விடை தெரிந்துகொண்டன, இலங்கை அழகிகள் போதிக்கும் அந்தப் பாடங்களை நேரில் கேட்டு!

அந்த அழகிகளின் சொல்லுக்கே புல்லாங்குழல் வீணை முதலான இன்னிசைக் கருவிகள் தோற்றுப் போகுமென்றால், அவர்கள் பாடுவது எப்படியிருக்குமோ? அந்தச் சந்தேகமும் தீரும்படி அந்தச் சங்கீதமும் இந்த விசுவரூப ரஸிகச் செவிகளில் வந்து விழத்தான் செய்கிறது.

சதிர்ப் போட்டி

இந்நகரத்தில் இசை பாடுகிறவர்கள் பலர் என்றால், அவர்களைக் காட்டிலும் பலர் பரத நாட்டியம் செய்கிறவர்கள் :

பாடு வார்பலர்
　என்னின், மற்(று) அவரினும்
　　பலரால்
ஆடு வார்கள்.

[என்னின்–என்றால். மற்று–அசை. அவரினும் பலர் – அந்தப் பாடுகிறவர்களிலும் பலராவார். ஆல் – அசை.]

அரக்க மாதர்களில் சிலர் அதி விசித்திர நாட்டியத் திறமை வாய்ந்தவர்கள் என்று ரஸிக அனுமனே அபிப்பிராயப்படுகிறான் :

வான மாதரோ(டு)
　இகலுவர் விஞ்சையர்
　　மகளிர் ;
ஆன மாதரோ(டு)
　ஆடுவர் இயக்கியர் ;
　　அவரைச்



சோனை வார்குழல்
அரக்கியர் தொடர்குவர் ;
தொடர்ந்தால்,
ஏனை நாடியர்
அருநடக் கிரியைஆய்ந் —
திருப்பார்.

[வான மாதரோடு — நர்த்தனம் செய்கின்ற தேவமாதர்களுடன். இகலுவர் — போட்டி போட்டு அவர்களுக்கும் மேலாக ஆடுவர். விஞ்சையர் மகளிர் — வித்தியாதரப் பெண்கள். ஆன மாதரோடு — அப்படி ஆடுகின்ற வித்தியாதர மகளிருடன். இயக்கியர் — யட்ச குலப் பெண்கள். சோனை வார் குழல் அரக்கியர் — சோனுமாரி பொழிய வந்த காளமேகம் போன்ற நீண்ட கூந்தலையுடைய அரக்க மகளிர். தொடர்குவர் — (அந்த யட்சகுல மகளிரைத்) தொடர்ந்து நடனமாடுவர். தொடர்ந்தால் — அப்படித் தொடர்ந்து நடனமாடும் போது. ஏனை நாடியர் — மற்ற நாட்டுப் பெண்மணிகள். அருநடக் கிரியை — (அவர்களோடு போட்டி போட்டுத் தாம் ஆடமாட்டாமல் அந்த) அருமையான நடன அடைவுகளை. ஆய்ந்திருப்பர் — உள்ளத்தில் ஆராய்ந்த வண்ணமிருப்பார்.]

ஒரு நடனப் போட்டி. வானமகளிருடன் விஞ்சைமகளிர் போட்டி போட்டு வெற்றியடைந்தார்களாம். இந்த விஞ்சை மகளிருடன் யட்சகுலப் பெண்கள் போட்டியிட்டு அவர்களுக்கும் மேலாகச் சதிராடினார்களாம். இந்த இயக்கியர்களையும் வென்று விடுகிறார்களாம் அரக்கியர்கள், நடனச் சிறப்பிலே.

இப்படி அரக்கியர்கள் அருமையான நர்த்தனங்கள் ஆடும்போது மற்றவர்களெல்லாம் தங்கள் ஆடல்களை நிறுத்தி விட்டு இந்த நர்த்தன அடைவுகளை வியப்புடன் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனராம்.

கிளிகளுக்கும் மழலை மென்மொழி கற்பிக்க வல்லவர்கள், எல்லா நாட்டினருக்கும் ஆடல்பாடல்கள் கற்பிக்கவும் வல்லவர்கள் என்பது குறிப்பு. இதனால் தான், நடனத்துக்கென்றே பிறந்தவர்களைப் போல் அந்த ராட்சஸ குல சுந்தரிகள் பின்னி அலங்கரித்த கூந்தலோடு ஜதிபாயும் போது, அங்கே உள்ள மற்றப் பெண்களெல்லாம் வைத்த கண் வாங்காமலே வியந்து கொண்டிருக்கிறார்களாம், அந்த நடனசூட்சுமங்களையும், சோனுமாரியாய்ப் பொழிகின்ற அடைவுகளையும் அழகுகளையும் அதிசயங்களையும்.

அடிமைக் கூத்து

ஆடல் பாடல்களிலே சில ராட்சஸ மாதர்கள் நிகரற்று விளங்கியபோதிலும், அரக்கர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற தேவர்களையும் கூத்தாடச் செய்து வேடிக்கை பார்ப்பதுண்டு. எஜமானர்கள் இஷ்டப்படியே கூத்தாடவேண்டியது அடிமைகளின் கடமை தானே !

ராவண ராஜ்யத்திலே தயாராகும் அகராதியில் ‘ தேவர் ’ என்ற சொல்லுக்கு ‘ அடிமை ’ என்றே பொருள்.

தேவர் என்பவர்
யாவரும் திருநகர்க்(கு)
இறைவற்(கு)
ஏவல் செய்பவர் !

[திரு நகர்க்கு இறைவற்கு — இலங்கைக்குத் தலைவனான ராவணனுக்கு.]

தேவர்கள் ராவணனுக்கு அடிமைகள் என்றால், ராவணாதி ராட்சஸர்களுக்கெல்லாம் கொத்தடிமைகள் (குடும்பத்தோடு அடிமைகள்) என்று தான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு ராட்சஸனும் ஒரு ராவணக் குஞ்சுதானே? — சுதந்திர யுகத்திற்கு முன்பு இந்தியாவில் ஒவ்வொரு வெள்ளை முகமும் ஒரு சக்ரவர்த்திக் குஞ்சாகக் கொக்கரித்தது போலே.

இப்படி அடிமைத் தொழில் செய்து வாழும் தேவர்களை 'வாழ்கிறார்கள்' என்றே எண்ண முடியவில்லையாம். அடிமைகளுக்கு வாழ்வு ஏது?

'தேவர்கள் வாழ்கின்றாரில்லை, உழல்கின்றார்; ஓடியாடித் திரியும் யந்திரங்களாக உழைக்கின்றார்' என்பது அனும சித்தாந்தம் :

உரம்அ டங்கிவந்(து)
உழையராய் உழல்பவர் !

[உரம் - வலிமை. உழையர் - எப்போதும் அருகிலிருந்து எஜமானருக்குக் குற்றேவல் செய்யும் அடிமைகள். உழல்பவர் - ஓடியாடித் திரிபவர்.]

இந்தக் கொத்தடிமைகளை எஜமானர்களின் சுகபோகப் பெருவாழ்வு என்ற பின்னணியில் பார்க்கிறோம், இந்தச் செய்யுளிலேயே :

மரம்அ டங்கலும்
கற்பகம், மனையெலாம்
கனகம்;
அரம டந்தையர்
சிலதியர் அரக்கியர்க்(கு),
அமரர்
உரம்அ டங்கிவந்(து)
உழையராய் உழல்பவர் !

[அடங்கலும் - எல்லாம். கற்பகம் - கற்பக விருட்சங்கள். கனகம் - பொன்மயம். அரமடந்தையர் - அமர மடந்தையர்; தெய்வப் பெண்கள். சிலதியர் - குற்றேவல் புரியும் மகளிர்.]

ஸர்வம் கனக மயம், கற்பக மயம் என்று வியக்கும்படியுள்ள ராவண ராஜதானியில் கொத்தடிமைக் கூத்தடிக்கும் அமரர்களின் நிலை எவ்வளவு பரிதாபமாயிருக்க வேண்டும் !

தேவலோகத்துக் கற்பக மரங்களையும் 'வலிமையே உரிமை' என்று பெயர்த்துக் கொணர்ந்து இலங்கைத் தோட்டங்களில் நட்டுவைத்ததுடன், அந்தச் சொர்



தக்காரர்களையும் அந்தத் தோட்டங்களிலே அடிமை வேலைகளுக்கு நியமித்துக் கொண்ட அரக்கர்களின் பெருமையை என்னென்பது?

எஜமானர் பெருஞ்சிறப்பு

அடிமைத் தேவர்களின் பரிதாப நிலையோடு எவ்வளவு முரண்பட்டிருக்கின்றன அரக்கர்களின் சுக போக ஆடம்பர வைபவங்கள்! தெய்வத் தச்சனே வந்து இங்கு உள்ள வேலைப்பாடுகளை அமைத்திருக்கிறானாம்.

'தொட்டு அழகு இழைத்த அத்தொழில்கள்' — அழகையே தொட்டுத் தொட்டு இழைத்து வைத்தது போன்ற அவ்வளவு மிகச் சிறந்த வேலைத் திறங்கள் — என்று வியக்கிறான் அனுமன்.

அதோ பேரிகை வாத்தியங்களின் கோஷங்களே பறைசாற்றி அறிவிக்கின்றன அரக்கர்களின் ஆடம்பர வைபவத்தை! அந்த வாத்திய முழக்கங்களும், அழகிய பெரிய யானைகளின் பிளிறல்களும், சமுத்திர கோஷத்தையும் அடக்கி விடுகின்றனவாம், அரக்கர்களின் ஆடம்பரங்கள் பிற நாட்டினரின் வைபவங்களை யெல்லாம் ஒடுக்கி யிருப்பது போலே:

தழங்கு பேரியின்
ஆர்கலி, தகைநெடுங்
களிறு
முழங்கும் ஓதையும்,
மூரிநீர் முழக்கொடு
முழங்கும்.

[தழங்கு — ஒலிக்கின்ற. பேரியின் — பேரிகையின். ஆர்கலி — நிறைந்த ஓசை. தகை நெடுங்களிறு — அழகிய பெரிய யானைகள். முழங்கும் ஓதையும் — பிளிறுகின்ற ஓசையும். மூரிநீர் முழக்கொடு முழங்கும் — கடலின் ஆரவார முழக்கங்களுடன் மாறுபட்டு முழங்கும்.]

அனுமனது விசுவரூபக் கண்கள் கடற்கரையிலிருந்து கோட்டை மதில் வரை ஊடுருவிப் பார்க்கின்றன, அந்தப் பெருமைகளை யெல்லாம். அவற்றுக்கெல்லாம் அரணான இந்த மதிலின் வலிமைதான் என்னே!

கறங்கு கால்புகா

[கறங்கு கால் — சுழன்று வீசும் இயல்புள்ள சுழல் காற்றுவகைகள். புகா — பிரவேசிக்க மாட்டா.]

என்கிறான் அனுமன், உயர்ந்து சந்து பொந்தில்லாமல் செறிந்து கட்டுங் காவலுமாயிருக்கின்ற மதிலை நோக்கியதும்.

இலங்கை மாளிகைகளை நோக்கியதும் 'ஆகாயம் அஞ்சவீசும் சண்டமாருதமும் அடங்கி ஒடுங்கித்தான் இங்கு வரவேண்டும்!' என்று கருதியவன், இப்போது கோட்டை மதிலின் உயர்வையும் உறுதியையும் கண்டதும், 'பெருஞ்சுழல் காற்றுக்களும் இங்கே சொரூபத்தை அடக்கி மடக்கி ஒடுக்கிக் கொள்ள வேண்டியது தான்!' என்கிறான்.

இப்படி ராவணேச்வரன் கோட்டை மதிலைக் கொண்டாடும் அனுமன், 'அறமும் உள்ளே பிரவேசிக்க முடியாதபடி மதில் கட்டி விட்டானே இந்த வல்லாள கண்டன்!' என்று கொஞ்சம் கிண்டலாகவும் தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான்:

அறம்பு கா(து), இந்த
அணிமதில் கிடக்கைநின்(று)
அகத்தின்!

[அறம்புகாது — தர்மமும் பிரவேசிக்க முடியாது. அணிமதில் — அழகிய மதில். கிடக்கை நின்று — எல்லையைக் கடந்து. அகத்தின் — இந்த நகரத்திற்குள்ளே.]

இத்தகைய கிண்டலுணர்ச்சியுடன் தான் 'அரக்கரும் பெரியார்!' என்கிறான்:

காயத்தால் பெரியார்,
வீரம் கணக்கிலார்,
உலகம் கல்லும்
ஆயத்தார்.

[காயத்தால் — உடம்பினால்; உடம்பின் அளவு ஆற்றல் முதலியவற்றால். உலகம் கல்லும் ஆயத்தார் — உலகத்தைத் தோண்டிப் பாழாக்கச் சித்தமா யிருப்பவர்கள்.]



398. வாழ்க்கையே களியாட்டம்!

அரக்கர் தலைநகரின் விசித்திர வேலைப்பாடுகள் பெரியோனாகிய அனுமனின் உள்ளத்தையும் பகட்டத்தான் செய்கின்றன. அரக்கர்களைப் போல் பெரியவனில்லை அனுமன்!—உண்மையாகவே பேரறிவாளன், பெருஞ்செயலாளன், பெருங்குணபூஷணம், அரும் பெருங் கலைவிநோதன்.

பொன் மலைமேல் இரத்தின மழையோ!

இத்தகைய கலையுள்ளமும் அரக்கர் பேரூரின் அமைப்பைக் கொண்டாடுகிறது :

பொன்னின் மால்வரை
மேல், மணி பொழிந்தனன்
பொருத்தி,
உன்னும் நான்முகத்(து)
ஒருவன் நின்(று) ஊழ்முறை
உரைக்கப்,
பன்னி, நாள்பல
பணிஉழந்(து), அரிதினிற்
படைத்தான்
சொன்ன வானவர்
தச்சன், நாம் இந்நகர்
துதிப்பான்!

[பொன்னின் மால்வரை மேல் — பொன்மயமான பெரிய மலைமேல். மணி பொழிந்தனன் — இரத்தின மழை பொழிந்து. பொருத்தி — அந்த இரத்தினங்களைத் தன் அற்புதச்சிற்பத்திறனால் அங்கங்கே பொருந்த அமைத்து. உன்னும்—(நகர அமைப்புத் திட்டம் போட்டு அதையே) நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த. நான்முகத்து ஒருவன் — நான்முகக் கடவுளான படைப்புத் தெய்வம். நின்று — பக்கத்தில் நின்று கொண்டு. ஊழ்முறை உரைக்க — செய்ய வேண்டியதை முறையாகப் படிப்படியே விளங்கச் சொல்லிவர. பன்னி — தானும் ஆராய்ந்து. நாள் பல பணி உழந்து — வெகு காலமாய் வெகு சிரமப்பட்டுச் சிற்பப் பணி புரிந்து. அரிதினின் — அருமையாக. சொன்ன — பிரசித்தமாய்ச் சொல்லப்பட்ட. வானவர் தச்சன் — தேவ சிற்பி.]

பொன்மயமாகத் தோன்றும் மலை மேடுகளிலும் தாழ்வரைகளிலும் வசதியான இடங்களிலெல்லாம் இரத்தின மயமான மாளிகைகள் கட்டப் பெற்றுள்ளனவாம். வசீகரமான சூரியாஸ்தமன வேளையில் அக்காட்சி அதி விசித்திரமாய்த் தென்படுகிறதாம்.

'ஏதோ ஒரு பொன்மலையில் இரத்தின மழை பொழிவது போலக் காண்கிறது! தேவ சிற்பியின் அற்புதக் கைத்திறன் இது' எனக் கொண்டாடுகிறான் அனுமன்.

நகர ஸ்துதி

தெய்வத் தச்சனுக்கு நகர அமைப்புப் படம் தயாரித்து ஒருவன் கொடுத்திருக்க வேணுமே, அவன் தான் நான்முகத் தச்சன்! அது மானஸிகப் படம் தான்.

அவன் அதே தியானமாக அருகில் நின்றுள்ளும். இயற்ற வேண்டிய அம்சங்களை ஒரே அடியாகச் சொல்லி விட்டால் தெய்வச் சிற்பிக்கும் தலை கிறங்கிப் போய் விடுமாம். எனவே அவனைக் குழப்பி விடாமல் முறை முறையாகத் தன் மனப் படமாகிய இலங்கையமைப்பை வெளியிட்டு வந்தான்.

வானவர் தச்சனும் ஆராய்ந்து பன்னெடு நாள் தவங்கிடப்பது போலப் பணிசெய்து கிடந்து வெகு அருமையாகப் படைத்துவிட்டானும் இந்நகரத்தை.

ஏன் அப்படிப் படைத்து விட்டான்? 'நாம் இப்படி யெல்லாம் துதிக்க வேணுமல்லவா?' எனச் சிறிது நகைச் சுவையுடன் நகர ஸ்துதி செய்கிறான் அனுமன்.

போகத்தின் உச்சம்

இத்தகைய அதிசய நகரத்திலே இரக்கமில்லாத அரக்கர்கள் குடிபுகுந்து போர்வெறி கொண்டு தேவர்கள் முதலான எதிரிகளை யெல்லாம் அடிமைகளாக்கிக் கொண்டனர். இப்பொழுது ஏகாதிபத்திய உச்ச நிலையில் போகத்திலே அமிழ்ந்து கிடக்கின்றனர்.

இசை, சிற்பம் முதலான கலைகளும் போக சாதனங்களாகவே பயன்படுகின்றன.

மதுபான விருந்து

அதோ பளிங்குக் கற்களால் அமைந்த மாளிகைகளில் என்ன நடக்கிறது பாருங்கள்:

பளிக்கு மாளிகைத்
  தலந்தொறும், இடந்தொறும்,
    பசுந்தேன்
துளிக்கும் கற்பகத்
  தண்ணறுஞ் சோலைகள்
    தோறும்,
அளிக்கும் தேறல்உண்(டு)
  ஆடுநர் பாடுநர்
    ஆகிக்
களிக்கின் றார்அலால்,
  கவல்கின்றார் ஒருவரைக்
    காணேன்!

[பளிக்கு மாளிகை - பளிங்கு மாளிகை. தலம் — ஸ்தலம்; (இங்கே) கட்டடம். இடம் — திறந்த இடங்கள். பசுந்தேன் — புதிய தேன். கற்பகத் தண்ணறுஞ் சோலைகள் — கற்பக விருட்சங்களையுடைய குளிர்ச்சியான, வாசனையுள்ள, சோலைகள். அளிக்கும் — (வேலைக்காரர்) கொண்டு வந்து கொடுக்கும். தேறல் — மது. ஆடுநர் — ஆடுகிறவர்கள். பாடுநர் — பாடுகிறவர்கள். கவல்கின்றார் — கவலைப்படுகின்றவர்.]

ஒரே களிக்கூத்து

எல்லாம் மதுபானம் செய்து ஆடிப் பாடுகிறவர்களின் கூட்டம் தான். கட்டடத்திற்கு உள்ளேயும் இப்படி, திறந்த இடங்களிலும் - இப்படியே. தோட்ட விருந்துகளிலும் மதுபான விருந்துகள்.

இப்படியெல்லாம் குடித்துக் கூத்தாடுகிற அரக்கர் கூட்டங்களைப் பார்த்ததும், 'இந்த விசித்திர மாநகரிலே வாழ்க்கை யெல்லாம் ஒரே களியாட்டம்தான்!' என்று அனுமன் கண்டுகொள்கிறான்.

அயோத்தி வாசிகளுக்கு வாழ்க்கை ஒரு கலைக்கூத்து என்றால், இலங்கை அரக்கர்களுக்கோ ஒரு களிக்கூத்து!

வாழ்க்கையிலே உயர்ந்த நோக்கம் ஒன்றும் அவர்களுக்கு இல்லை.

தின்றுவிளை யாடிஇன்புற் –
றிருந்து வாழ்விர்

என்ற பாரதியாரின் ஒரு வாக்கியத்தைத் தனிப்படுத்திக் குறிக்கோளாக்கித் தின்றும் குடித்தும் இன்புற்று வாழ்கின்ற அரக்கர் குலப் 'பெரியோர்' உண்மையாகவே வாழ்கின்றார்களா?

தேடிச் சோறுநிதம் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து -

வாழும் அரக்கர் வாழ்வு நரக வாழ்வன்றோ?



களிப்பும் கவலையும்

ஆடம்பர வாழ்வும் அதிகாரத் திமிரும் கொண்டு பல்வேறு போக வகைகளையும் நுகர்ந்து நுகர்ந்து மதங்கொண்டு (வேறு மதமின்றி) மதிமயங்கிய களிக் கூத்தாடிகளுக்கு உயர்தர வாழ்க்கை ஏது?

இலங்கையில் சீதையைத் தேட வந்திருக்கும் அனுமன்,

களிக்கின் றார்அலால்
கவல்கின்றார் ஒருவரைக்
காணேன்!

என்று தானே இப்போது கவலைப்படுகிறான். கவலை தோய்ந்த ஒரு திருமுகமல்லவா போகத்தின் இந்த நிலயத்திலே இவன் தேட வந்திருப்பது?

அழகுக் காடு

இத்தகைய நினைவுகள் உள்ளத்தில் ஓட, அனுமனின் கண்கள் வடக்கும் கிழக்கும் மேற்கும் ஆகிய முத்திசைகளையும் பார்க்கின்றன. ஒரு திசை திடீரென்று பவளக்காடு போலக் காண்கிறதாம். ஒரு திசை ஒரே நீல மலர்ப் பொய்கையாகத் தோற்றமளிக்கிறதாம். மூன்றாவது திசையோ ஒரே செந்தாமரைக் காடுதான்!

உண்மையில், செந்தாமரைக் காடுமில்லை, பவளக்காடுமில்லை, நீல மலர்கள் நிறைந்த கடல் போன்ற நீர்நிலைகளுமில்லை :

விளரிச் சொல்லியர்
வாயினால் வேலையுள்
மிடைந்த
பவளக் காடெனப்
பொலிந்தது; படைநெடுங்
கண்ணால்
குவளைக் கோட்டகம்
கடுத்தது; குளிர்முகக்
குழுவால்
முளரிக் கானமும்
ஆனது—முழங்குநீர்
இலங்கை.

நீலக் குவளை மலர்கள் நிறைந்த நீர்நிலை, கடுத்தது — போன்றது. குளிர்முகக் குழுவால் — கண்டதும் குளிர்விக்கும் முகங்களின் கூட்டத்தால். முளரிக் கானமும் — செந்தாமரைக் காடும். முழங்கு நீர் இலங்கை - முழங்குகின்ற கடல் சூழ்ந்த லங்காபுரி.]

எல்லாம் இப்போது மகளிர் கூட்டம் என்ற அந்த அழகுக் காடுதான், கடல் தான் ! கலைகளைப்போல் அழகும் அரக்கர்களுக்குப் போக வாழ்க்கையின் உபகரணம் தானே :

தேறல் மாந்தினர் ;
தேனிசை மாந்தினர்;
செவ்வாய்
ஊறல் மாந்தினர் ;
இன்னுரை மாந்தினர்...

[தேறல் — மது ; கள். மாந்தினர் — பானம் செய்தார்கள். தேன் இசை — தேனினும் இனிதாகப் பாடுகின்ற சங்கீதம்.]

இப்படி மிதமிஞ்சிய போகத்திலே நீந்தி மூழ்கிக் கொண்டிருக்கும் இலங்கை மாநகரை நோக்குகின்ற அனுமன், ஒரு திசையில் 'கருங்குன்றுகள் புடைபெயர்ந்து போகின்றனவோ ?' என்று திகைத்த வண்ணம் யானைகளைப் பார்க்கிறான்.

மதங்கொண்ட யானைகள் துதிக்கையால் செம்புழுதியை அள்ளி அள்ளித் தாமே தம் தலையில் போட்டுக் கொண்டு போகின்றனவாம், மதோன்மத்தராய்க் களியாட்டமாடும் அரக்கர்களைப் போலே.

அரக்கர் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொண்ட பாடம்தானோ ?

* * *

மத்த மதவெங் களிறுபோல்
—நடை
வாய்ந் திறுமாந்து திரிகுவார்.

என்று பாரதியார் பாடும் அந்த வாழ்வு வேறு, இந்த அரக்கர் வாழ்வு வேறு. சித்தத்திலே சிவம் நாடி உலகத்துடன் ஒன்று பட்டு வாழும் வீர சுதந்திர ராம ராஜ்ய வாழ்வு அது.



399. அஸ்தமனமும் — இருளும்

அரக்கர் பேரூர் தன் ஏகாதிபத்திய உச்சத்திலே சுகபோக ஊஞ்சலாடுகிறது. போகத்தின் எல்லையை எட்டி நின்றபோதிலும் தன் ராணுவ வலிமையையும் உயர்வையும் சிறிதும் இழந்துவிடவில்லை.

ராணுவப் பெருமை

வீரக்கழல் அதிர இறுமாப்புடன் அங்குமிங்கும் பரபரப்பாக உலாவிக் கொண்டிருக்கிறார்கள் அரக்க வீரர்கள். கைகளிலே வேல்கள் சும்மா இருக்கின்றனவா?—உலாவுகின்றனவாம் பரபரப்பாக, அமைதியின்றி. கொலைக் கருவிகள் யாரைக் கொலை செய்வோமென்று துடிப்பது போலக் காண்கின்றன. கண்களோ நெருப்பைக் கக்குகின்றன :

கழல்உலாம் காலும்,
கால வேல்உலாம்
கையும், காந்தும்
அழல்உலாம் கண்ணும்
இல்லா ஆடவர்
இல்லை.........

[கழல் - வீரக் கழல். உலாம் - உலாவும். கால வேல் - எமன் போன்ற வேல். காந்தும் அழல் - எரியும் அனல்.]

இந்த ராணுவ ராஜ்ய வலிமையை ராமனிடம் போய்த் தெரிவிக்க வேண்டுமல்லவா? ஆனால். சேனை மிகுதியையும், கொலைக் கருவிகளின் மிகுதியையும் எப்படி வருணிப்பது? ஒவ்வொரு வகைப் படையும் மிகவும் அதிகமாயிருக்க, இவற்றில் இன்னது பெரிதென்று துணிந்து சொல்லத்தான் இயலுமா?

வில்லையும் வேலையும் வாளையும் வேறு ஆயுதங்களையும் தாங்கித் தாக்கவல்ல வீரர்களை வியந்து பேசுவதா? ஆயுதம் எடுக்காமல் உடல் வலிமை கொண்டே மற்போர் புரியவல்ல வீரர்களைப் பாராட்டுவதா?

அனுமனுடைய பேராண்மையுள்ளமும் அரக்கர் கோநகரின் ராணுவ பலங் கண்டு திகைப்படைகின்றதாம் :

விற்படை பெரிதென்
கேனோ? வேற்படை
பெரிதென் கேனோ?
மற்படை யுடைத்தென்
கேனோ? வாட்படை
வலிதென் கேனோ?

கற்பணம் தண்டு
 பிண்டி பாலமென்(று)
 இனைய காந்தும்
நற்படை மிகும்என்
 கேனோ, நாயகற்(கு)
 உரைக்கு நாளில்?

[விற்படை - வில்வீரர்களின் சேனை. என்கேனோ - என்று சொல்வேனோ. வேற்படை - வேல் வீரர்களின் சேனை. மற்படை - மற்போரில் வல்ல வீரர்களின் சேனை. உடைத்து - மிகுதியாக உடையது, வலிது என்கேனோ - மிகுதியாய் உள்ளது என்று சொல்வேனோ. கற்பணம் — இரும்பினால் யானை நெருஞ்சி முள்ளைப் போல் செய்திருக்கும் கப்பணம் என்ற ஆயுதம். தண்டு - தண்டம்; கதை. பிண்டிபாலம் - வீசி எறியக் கூடிய ஒருவகை ஆயுதம். என்று இனைய - இப்பேர்ப்பட்ட கருவிகள். காந்தும் - விளக்கப் பெற்ற. நற்படை - சிறந்த சேனை. மிகும் என்கேனோ - மிகுதியாக உள்ளது என்று சொல்வேனோ.]

இப்படியெல்லாம் அனுமன், இலங்கைப் பவளமலையில் வந்து இறங்கி நின்று கொண்டிருக்கும்போதே, திகைப்பின் மேல் திகைப்பாகி எண்ணமிடுகிறான், அந்த மோகன மாலை வேளையிலே. இலங்கை மாளிகைகளை முதல் முதல் பார்த்த திகைப்புடன் தொடங்கும் இந்தக் காட்சி,

விற்படை பெரிதென்-
 கேனோ?

என்பது போன்ற படைப் பெருமை குறித்த திகைப்புடன் முற்றுப் பெறுகின்றது.

அஸ்தமனமும் உட்பொருளும்

இதுவரை, 'கடல் தாண்டி வந்த அதே விசுவரூபத்தில் இருக்கிறோமே, அரக்கர்கள் பார்த்துவிடக் கூடுமே' என்ற எண்ணம்கூட இல்லை,—அவ்வளவு மறதி, முதல் முதல் ஏற்பட்ட திகைப்பு மிகுதியிலே.

இவ்வளவு திகைப்பும் நினைப்பும் இப்படி வெள்ளமிட்ட போதிலும் இந்த நிலைமை நீடித்திருந்ததென்று கருதுவது சரியன்று. அதி வேகமாய் அலையெறிந்த சிந்தனை வெள்ளத்தைக் கவிகளில் தேக்கிக் காட்டத்தான் நேரம் பிடித்ததென்று கருத வேண்டும்.

விரைவிலே, 'கொடிய அரக்கர்கள் நான் இங்கே யிருப்பதைக் கண்டு பிடித்து எதிர்க்கவும் கூடுமே' என்ற நினைப்பும் வந்துவிடுகிறது. இந்நினைப்பிலே திகைப்பை யெல்லாம் உதறித் தள்ளிவிடுகிறான். உடனே தன்னைக் காட்டிக் கொடுக்கக் கூடிய அந்தப் பேருருவத்தைச் சுருக்கிக் கொள்கிறான்.

அப்போது சூரிய அஸ்தமனம் ஆகிவிட்டது:

என்றனன், இலங்கை
 நோக்கி இனையன
 பலவும் எண்ணி
நின்(று),'இவண் அரக்கர்
 வந்து நேரினும்
 நேர்வர்' என்றுத்,
தன்நகை அனைய
 மேனி சுருக்கி,அச்
 சரளச் சாரற்
குன்றிடை யிருந்தான்:
 வெய்யோன் குடகடல்
 குளிப்ப தானான்.

[என்றனன் — என்று இவ்வாறு எண்ணமிட்ட அனுமன். இனையன பலவும் — இப்பேர்ப்பட்ட பல எண்ணங்களையும். இவண் — இங்கே. நேரினும் நேர்வர் — எதிர்ப்பட்டு எதிர்த்தாலும் எதிர்ப்பர். என்று — என்று நினைத்து. தன் நகை அனைய மேனி — தன் தகுதிக் கேற்ற அந்த விசுவரூபம். சரளச் சாரல் — அழகிய மலைச்சாரல். குன்றிடை — குன்றிலே. குடகடல் — மேல்கடலில்.]

அனுமனுடைய விசுவரூபத்தைத் தான் எவ்வளவு அருமையாகத் 'தன் நகை அனைய மேனி' என்கிறான்! அந்தப் பேருருவத்திற்கு அந்தப் பெருங் குணத்தை உபமானமாகக் காட்டி, அந்தப்

பெருங் குணத்தைத்தான் எப்படிச் சிறப்பிக்கிறான்!

அனுமன் தன் பெருவடிவத்தைச் சுருக்கிக் கொள்ளும்போதே, சூரியனும் தன் கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு மேல் கடலில் குளித்து மறைந்து போகிறான்.

தங்கம் உருகிப் பாய்வது போலிருக்கிறது இலங்கையைச் சூழ்ந்திருக்கும் கடற்புறமெங்கும். மங்கி வரும் அக் கதிரொளியின் அந்த வர்ண ஜாலங்களிலே மூழ்கிக் களிக்கிறது ராட்சஸ ராஜதானி.

இந்தக் கம்ப சித்திரத்தின் ஓர் எதிரொலித் துணுக்கினைப் 'பாஞ்சாலி சபதம்' என்னும் பாரதியாரின் இதிகாசத் துணுக்கிலும் காணலாம்.

பஞ்ச பாண்டவர்கள் பகலெல்லாம் வழி நடந்து, வழியெங்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் அஸ்தினாபுரம் வந்து சேருகிறார்களாம். சூரியாஸ்தமனம் ஆகும் வேளை. 'கதிர் மங்கிடுமுன் ஒளிமங்கு நகரிடை வந்துற்றார்' எனப் பாடுகிறார் பாரதியார்.

கதிரொளி மங்கும் வேளையில், துரியோதனன் என்ற ஒளி மங்கிக் கொண்டிருக்கும் தலை நகரத்திற்கு வந்து சேர்ந்தார்களாம் பாண்டவர்கள். அனுமன் இலங்கைக்கு வந்து சேர்ந்த சூரியாஸ்தமன வேளையில் ராவணன் என்ற ஏகாதிபத்திய சூரியனுக்கும் அஸ்தமன வேளை தானே!



இருளும் பொருளும்

அந்தி மாலை காட்டும் இந்திர ஜாலங்கள் மறைந்து அரக்கர் பேரூரை இருள் சூழ்ந்து கொள்கிறது.

அந்த இருட்டிலும் இலங்கையை நோக்குகிறான் அனுமன், தன் சுருங்கிய மேனியிலிருந்து கொண்டே. இப்போது முன்னிலும் அதி ஜாக்கிரதையாக இருக்கிறான்.

அரக்கர்கள் நிசாசரராதலின்— அதாவது விசேஷமாக இரவில் சஞ்சரிப்பவராதலின் — முன் ஜாக்கிரதை

யாகவே மேனியைச் சுருக்கிக்கொண்டு, அந்த இருட்டிலே அந்தப் பேருரில் என்ன நடக்கிறது என்பதைக் கூர்ந்து கவனிக்கப் போகிறான்.

அதற்குமுன் அரக்கர் பேருரைச் சூழ்ந்து கொண்ட இருளை வருணிக்கிறான் கவிஞன் :

ஏய்வினை இறுதியிற்
 செல்வம் எய்தினன்,
ஆய்வினை மனத்திலான்,
 அறிஞர் சொற்கொளான்,
வீவினை நினைக்கிலான்,
 ஒருவன், மெய்யிலான்
தீவினை என இருள்
 செறிந்த(து) எங்குமே.

[எய்வினை — (கொடிய மனத்துக்கு) இசைந்த கொடுஞ் செயல்கள்; வஞ்சகம், கள்ளம், பலாத்காரம் முதலியன. இறுதியின் — (பிறருக்கு) இறுதி அல்லது அழிவை விளைப்பதால். ஆய் வினை — ஆராயும் தொழில். வீவினை — கேட்டை அல்லது மரணத்தை. செறிந்தது — அடர்ந்தது.]

மனம்போன போக்கெல்லாம் போய்த் தனம் சேர்க்கிறானும். ஏழைகளின் இரத்தத்தை இரத்தினமாக்கிக் கொள்கிறானும். 'தருமா, தருமமா?' என்று ஆராய்ந்து பார்ப்பதற்கே அவகாசம் இல்லாமல் உள்ளம் தீண்டியதை யெல்லாம் பொன்னாக்கி மணியாக்கி வருகிறது, கதையில் வரும் மைடாஸ் அரசன் என்ற பேராசையன் போலே. அந்த விபரீத விளைவு வருமே என்பதைத் தானும் அறியாதவன்; அறிஞர் அறிவித்திருக்கும் அறிவுரைகளைக் கொண்டும் அறிந்து கொள்ளாதவன்.

'இந்த வழி ஸர்வ நாசத்தில் அல்லவா கொண்டு போய்ச் சேர்த்து விடும்?' என்பதையும் நோக்காமல் மனக்கண்ணை இறுக மூடிக் கொள்கிறானும். புதரிலே கண்ணைப் புதைத்துக்கொண்டு தனக்கு வரும் ஆபத்தைக் காண மறுக்கும் ஆஸ்ட்ரிச் என்ற நெருப்புக்கோழி போலே. அத்தகைய பேர்வழிக்கும் உண்மைக்கும் என்ன உறவுதான் இருக்க முடியும்?

இப்படியெல்லாம் ஏதோ ஒரு பொதுவுடைமைப் பிரசாரகன் முதலாளிவர்க்க நாகரிகத்தைப் பழித்துரைப்பதுபோன்ற ஒரு பிரசங்கமே அடங்கிக் கிடக்கிறது இச்செய்யுளில்!

ஒருவனையும் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டவில்லை யெனினும், மூன்று லோகத்திற்கும் ஒரு முதலாளி ராவணன் தானே?

ராவணன் பெருஞ்செல்வன், சக்ரவர்த்தி, ஸர்வாதிகாரி, ராட்சஸ வேதியர் குலதிலகம். (திராவிடப் பெரியோன் என்றாவது, தமிழ்வீரன் என்றாவது ஒரு ராமாயணமும் தெரிவிக்கவில்லை!) 'ஐயன், வேதம் ஆயிரம் வல்லோன், அறிவாளன்' அல்லவா?

எத்தகைய குலமும் கோத்திரமும் பேறிவும் பேராற்றலும் தீவினையைப் பெருக்குவதில் மூண்டு உலகில் இருளைப் பரப்பி வந்தன, பாருங்கள்! எனினும் இருள் நிலைத்து நிற்க முடியுமா?

அனுமனுள்ளத்திலே திசைப்பெல்லாம் பரந்து தெளிவு பிறந்து கொண்டிருக்கிறது.



400. இருள் தந்த வழி

கடல் தாண்டி இலங்கைக்குப் போனதும் அனுமன் முதன் முதல் இலங்கை வளப்பம் கண்டதைக் கம்பன் எப்படி வருணித்திருக்கிறான் என்று பார்த்தோம். இனி, இந்தப் பகுதி ஆதி காவியமாகிய வால்மீகத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்று பார்க்கலாம்.

ரஸமான கதைப் போக்கு

அக்கரைக்கு அருகே சென்றதும் காடடர்ந்த அழகான இலங்கைத் தீவையும், கரையிலுள்ள சதுப்பு நிலங்களையும், ஆறுகள் கடலில் கலக்கும் சங்கம ஸ்தானங்களையும் பார்த்தான் அனுமன். உடனே தன் பெரிய உடம்பைச் சுருக்கிக்கொண்டான், நெடுமால் தன் விராட் ஸ்வரூபத்தைக் குறுக்கிக் கொண்டு மகாபலி முன் வாமன ரூபியாக வந்தது போல.

லம்பம் என்ற மலையின் அழகான கொடுமுடிகளைப் பார்த்து அழகான மரங்களுக்கிடையே இறங்கினான், மிருகங்களையும் பறவைகளையும் பயமுறுத்திக் கொண்டே. மரங்கள் சொரிந்த மலர்மாரியால் மலர்களால் செய்த ஒரு வானர விக்கிரகம் போல் விளங்கினான். ஒரு வெற்றி வீரன் போலவும் பூமயமாய்ப் பொலிந்தான்.

திரிகூட மலையில் நிர்மாணிக்கப்பெற்றிருந்த இலங்காபுரியைக் கவனித்துப் பார்த்தான். பசுமையாய்ச் செழித்து வளர்ந்த புல்லாந்தரைகளையும், பாறைகளும் மரங்களும் நிறைந்து நறுமணம் கமழ்ந்த சோலைகளையும் கண்ணுற்று அவைகளுக்கிடையே உலாவினான்.

சில மரங்கள், இனிமையாய்ப் பாடும் பறவைகளால் நிறைந்து காற்றிலே ஆடும் நுனிகளுடன் காணப்பட்டன. நீர் நிலைகள், நீர்ப் பறவைகளான அன்னம், நீர்க்காக்கை முதலிய பிராணிகளாலும், தாமரை கருநெய்தல் முதலிய மலர்களாலும் திகழ்ந்தன. அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இலங்கா நகரத்தின் அருகிலே வந்து சேர்ந்தான்.

இந்த ராவண ராஜதானியில் இப்போது சீதை சிறையிருப்பதால் இது முன்னிலும் அதி ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்தது. பொன் மயமான உயர்ந்த மதிற் சுவர்களையும், கோட்டைச் சுவர்களின் மேல் அங்கங்கே இருந்து போர் செய்யும் வசதிகளையும், விசித்திரமான கொடிகளையும் தோரணங்களையும் கண்ணுற்றான் அனுமன். ஆகாயத்தில் பறந்து செல்லும் ஒரு நகரம் போலத் தோன்றுமாறு தெய்வச் சிற்பியால் அமைக்கப் பெற்றிருந்தது.

அனுமன் வடக்கு வாசலுக்கு அருகே போய் நகரத்தை உற்றுப் பார்த்தான். கணக்கிறந்த அரக்கர்கள் கோரப் பற்களுடன் ஆயுதபாணிகளாய், மலைக்குகையைச் சர்ப்பங்கள் காப்பது போலக் காத்து வந்தனர். (இக் கருத்தைக் கம்பன் வற்புறுத்துகிறான்.)

பிரதாப லங்கேச்வரனின் இந்த இலங்கைக்குள் எப்போது எப்படிப் பிரவேசிக்கலாம் என்று ஆலோசித்தான் அனுமன். இரவில் பிரவேசிப்பதென்று தீர்மானித்தான். சீதையைத் தேடும் வழி குறித்து அடிக்கடி ஆலோசித்தான்.

சூரியன் அஸ்தமித்து இராத்திரியானதும், அனுமன் தன் உடம்பைப் பூனையின் அளவிற்குச் சுருக்கிக்கொண்டு இலங்கை வீதிகளில் வேகமாய்ப் பிரவேசித்தான். ஏழெட்டு அடுக்கு உபரிகைகளுடன் கூடிய மாளிகைகள் ஸ்படிகக் கற்களால் அலங்கரிக்கப் பெற்றுத் தங்க வேலைப் பாடுகள் செய்த தரைகளுடன் இலங்கையை ஜொலிக்கச் செய்தன. அனுமன் ஆச்சரியமடைந்தான். பிறகு சந்திரோதயமாகிறது. இது வால்மீகத்திலே கதைப் போக்கு.



கதையிலே புதையல்

கம்ப ராமாயணத்திலே, அனுமன் தன் விசுவரூபத்தை சுருக்கிக் கொள்ளவும் மறந்து நினைப்புற்று இலங்கையைப் பார்த்து, 'இது பொருளுக்கும் அதிகாரத்திற்கும் போகத்திற்கும் ராணுவத் திமிருக்கும் ஒரு நிலயம்' எனத் தெரிந்து கொள்கிறான். பிறகு இருளிலும் இலங்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை ஒருவாறு பார்த்துக்கொண்டு, நிலவிலும் இலங்கை பார்க்கப் போகிறான்.

எப்படிப் பார்த்தாலும் அரக்கர்களை இருளின் சக்திகளாகவும், ஒளி மயமான தெய்வ வழியில் எதிரிகளாகவும் காட்டுவது கம்பனின் நோக்கம்.

ஆனால் அதற்கு முன்பே இருளோடு இருளாக வருணிக்கப் படுகிறது பிரதாப லங்கேச்வரனின் பிரதாபம். ராவணனுடைய தீவினைபோல் இருள் அடர்ந்தது என்று சொல்லி விட்டு, அந்தத் தீவினைக்கு மேலும் கரி பூசிய செயலையும் நினைப்பூட்டுகிறான்.

அதுதான் சீதையைச் சிறை வைத்த கொடுமை. இருள் விரிந்து விழுங்குகிறதாம் இலங்கையை,

வண்மைநீங் காநெடு
  மரபின் வந்தஅப்
பெண்மைநீங் காநகற் —
  புடைய பேதையைத்
திண்மைநீங் காதவன்
  சிறைவைத் தான்எனும்
வெண்மைநீங் கியபுகழ்
  விரிந்த தென்னவே —

[நெடு மரபு — சிறந்த குலம். பேதை - சீதைப் பெண். திண்மை — வலிமை.]

பொருளையும் ஞானத்தையும் வாரி வழங்கி வந்த ஜனகர் குலத்திலே உதித்த உத்தமியை வலிமையே உரிமையாகக் கொண்டு சிறை வைத்தானல்லவா? இந்தச் செயலால், மூவுலகையும் சுரண்டிப் பிழைத்த ராவண கீர்த்தியில் அற்ப சொற்பமாக மிஞ்சியிருந்த வெண்மையும் நீங்கி விட்டதாம். ராவணனார் 'புகழ்' ஒரே இருட்டாகி விட்டதாம், சீதையை அபகரித்த பின்பு.

இந்த இருளிலே அரக்கர்கள் மிகவும் சுறுசுறுப்பாகிறார்கள். இருட்டை இருட்டு மிதித்துப் போவது போலப் பல திசைகளிலும் திரியத் தொடங்குகிறார்கள் :

வெவ்வழி இருள்தர
  மிதித்து மீச்செல்வார்.

[வெவ்வழி — கொடிய வழி. மீச் செல்வார் — மேலே செல்கிறார்கள்.]

இருள் சூழ்ந்த ஆதிக்கம்

கருங்கற்படிகள் மீது கால் வைத்து ஏறுகிற மாதிரி ஏறுகிறார்களாம், திரண்டு செறிந்து கிடந்த இருட்டின் மீது. ஏறி ஏறி இந்திர லோகத்திற்கும் சந்திர லோகத்திற்கும், யமலோகத்திற்கும் கூடப் போகிறார்களாம் :

இந்திரன் வளநகர்க்(கு)
  ஏகுவார், இகல்—
சந்திரன் உலகினைச்
  சார்குவார், கலித்(து)
அந்தகன் உறையுளை
  அணுகு வார், அயில்—
வெந்தொழில் அரக்கர(து)
  ஏவல் மேயினார்.

[வள நகர்—வளம் நிறைந்த அமராவதி நகரம். ஏகுவார் - போவார். இகல் - பகை. சார்குவார் - சேர்வார். கலித்து - (ஹா ஹோவென்று) ஆரவாரஞ் செய்து கொண்டு. அந்தகன் - யமன். உறையுள்- இருப்பிடம். அணுகுவார் — சமீபிப்பார். அயில் - வேல். வெந்தொழில் - கொடுந்தொழில். ஏவல் மேயினார்-கட்டளையிலே பொருந்தியவர்கள்.]

யம லோகத்திற்குப் போகிறார்களே, ஏன்? அழைப்பிற்கோ ஆணைக்கோ இணங்கி இங்கே பிழைப்பு முடிந்ததும் செல்லும் கடைசி யாத்திரையன்று. காலனும் கூப்பிடவில்லை, கால தூதரும் இழுத்துச் செல்லவில்லை. 'வா, வா' என்று அவர்கள் கூப்பிட, 'கூ, கா!' என்று சுற்றத்தார் கூச்சலிடப் போகும்

சாதாரண யமலோகப் பிரவேசம் இல்லை இது. 'போ போ' என்று சொல்லவும், 'கா கூ' என்று கத்தவும் அஞ்சிக் கிடக்கும் யமதர்ம ராஜாவின் இருப்பிடத்தருகே 'ஹா, ஹோ!' என்று இரைந்து கொண்டே போகிறார்களாம் சில அரக்கர்கள்.

யமனூர் வழியாகப் போகும் போதே 'அதோ யம ராஜாவின் அரண்மனை' என்று ஒருவன் காட்ட, அதை நெருங்கிப் போய்க் கொண்டே, சத்தம் போடுகிறார்களாம்; அதட்டுகிறார்களாம். இப்படி யமனையும் மிரட்டக் கூடிய 'யம்டன்' களை அவன் எப்படி அணுகத் துணிவான்?

ஈச்வரனது அதிகார முத்திரை தரித்த யம ராஜாவும் ராவணேச்வரனது உத்தரவுப்படி அரக்கர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் கண்டு கிலியடித்துச் சுரம் பிடித்துக் கிடக்கிறானென்றால், ராவண ஏகாதிபத்திய வைபவத்தை என்னென்பது?

அதிகாரத் திமிர்

ஒருபுறம் ராவணனுக்கும் ராட்சஸப் பிரமுகர்களுக்கும் குற்றேவல் செய்வதற்குப் பணிப் பெண்கள் போகிறார்களாம், அணியணியாக. வான வீதியில் மின்னற் கொடிகள் நெருங்கிப் போனால் எப்படியிருக்குமோ அப்படி நெருங்கி வேகமாய்ப் போகிறார்களாம், தேவ மாதர்களும் வித்தியாதர ஸ்திரீகளும் நாககன்னிகைகளும் யட்சகுல சுந்தரிகளும். ஒருபுறம் தேவஜாதி ஆடவர்களும் அரக்கர்களுக்குத் தொண்டு செய்ய விரைந்து கொண்டிருக்கிறார்கள்.

அதோ பாருங்கள் அவசர அவசரமாகத் தேவர்கள் உத்தியோகம் பார்க்க ஓடும் காட்சியை:

சித்திரப் பத்தியின்
  தேவர் சென்றனர்;
'இத்துணை தாழ்ந்தனம்,
  முனியும்!' என்று தம்
முத்தி(ன்) ஆரங்களும்
  முடியும், மாலையும்,
உத்தரீயங்களும்
  சரிய ஓடுவார்!

[பத்தி — வரிசை: அணி வகுப்பு. இத்துணை — இவ்வளவு (நேரம்). தாழ்ந்தனம் — தாமதித்து விட்டோமே. முனியும் — கோபித்துக் கொள்வானே. சரிய — சரிந்து கீழே விழும்படி.]

கைதிகள் போலவும் கூலிச் சிப்பாய்கள் போலவும் வரிசை வரிசையாகப் போகிறார்கள் அடிமைத் தேவர்களான உத்தியோகஸ்தர்கள். இப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது, 'இவ்வளவு தாமதித்து விட்டோமே, எஜமான் கோபிக்குமே' என்ற எண்ணம் உண்டாகிறதாம்.

உடனே நடை ஓட்டமாகிறது. அவர்கள் முன்னே ஓடச் சரிகை உத்தரீயங்கள் பின்னே சாய்ந்து ஓடிச் சரிந்து விழுகின்றனவாம்.

உத்தரீயங்களும் முத்துமாலைகளும் அணிந்திருப்பதால், சாதாரண ராவ் ஸாஹேப், ராவ் பஹதூர்களல்லர் இவர்கள். அன்னிய ஆதிக்கத்திலே விசேஷ கௌரவம் பெற்ற அடிமைகள்! தலையில் சும்மாடு போலச் சுமக்கும் கிரீடங்களிலிருந்து தேவஜாதிச் சிற்றரசர்களும் இந்தக் கூட்டத்தில் காணப்படுகிறார்கள் என்று ஊகிக்கலாம். கூப்பர் கவிதையில் குதிரைச் சவாரி போகும் ஜான் ஜில்பின் துரைபோல இவர்களும் சொல்லிக் கொள்ளலாம், 'எங்கள் உத்தரீயங்களும் முத்துமாலைகளும், கிரீடங்களும் கிரீட மாலைகளும் பாதையில் ஓடி வந்து கொண்டிருக்கின்றன, விரைவிலே வந்து சேரும்!' என்று.

இப்படி நிலைகுலைந்து ஓடும்போதும் சித்திரப்பத்தி குலைந்து போகவில்லையாம்:

சித்திரப் பத்தியின்
  தேவர் சென்றனர்!

இருள் தந்த வழி அரக்கருக்கு மட்டுமா, — அக்கிரமத்திற்குப் பணிந்து கொடுக்கும் அடிமைகளுக்கும் தான்!

இப்படியெல்லாம் கதையிலும் கவிதையிலும் புதையல் காட்டுவது கம்பசித்திரத்தின் சிறப்பியல்களில் ஒன்று.